JUL 1966

ஆரம்பக்கல்வி

ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ 3] [தனி இதழ் 25 ந. பை.

மலர் 30	ஜூன் 1966	இதழ் 6

அகலம் மட்டும் போதாது! ஆழமும் வேண்டும்!!

“கல்வி பெரும் அளவில் வளர்ச்சி கண்டிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் இத் துறையில் இதுவரை நடந்தேறியதையும் இனிச் செய்ப வேண்டியதையும் சரிவர மதிப்பிட்ட பின்னரே மேல் நடவடிக்கைகளைப் பற்றி முடிவு செய்ய வேண்டும். புதிய சாதனைகளை இத் துறையில் செய்யத் தொடங்குவதற்கு முன்னால் இதுவரை புரிந்துள்ள சாதனைகளை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். கல்வி வசதிகளைக் கண்மூடித்தனமாகப் பெருக்கிக் கொண்டிருப்பதை நிறுத்தி விட்டு கல்வியின் தரத்தை உயர்த்துவதில் கவனம் செலுத்த வேண்டும்.”

இந்த வாசகங்களைப் பார்க்கும் போது, இவை, ஏற்கெனவே “ஆரம்பக் கல்வி” இதழில் வெளியாகியுள்ள தலையங்கக் கட்டுரை

ஒன்றின் பகுதிகளைப் போல் காட்சி அளிக்கின்றன அல்லவா? ஆனால் உண்மை என்னவென்றால் இந்தக் கருத்துரைகளை அளித்திருப்பவர், **இந்தியப் பேரரசின் கல்வி அமைச்சர் திருவாளர் சக்ளா அவர்கள் ஆகும்.**

பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த கல்வி அமைச்சர்களின் மாநாடு, 18-6-66 அன்று சென்னை மாநகரில் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்றிருக்கிறது. அந்த மாநாட்டைத் தொடங்கி வைத்துச் சொற்பொழிவு ஆற்றுகையில் தான் அமைச்சர் சக்ளா அவர்கள் இந்த அனுபவ மொழிகளை அளித்துள்ளார்.

அழுத்தந் திருத்தமான முறையிலும் திட்டவட்டமான வகையிலும் திருவாளர் சக்ளா அவர்களால் எடுத்துக்காட்டப்பட்டுள்ள இதே கருத்துக்களை "ஆரம்பக் கல்வி" இதழின் தலையங்கங்களின் வாயிலாக நாம் எத்தனையோ முறை எடுத்துக் கூறியுள்ளோம்; சில சமயங்களில் இடித்தும் கூறியுள்ளோம்.

தொடக்கப் பள்ளிகள்,
உயர்நிலைப் பள்ளிகள்,
பயிற்சிப் பள்ளிகள்,
கலைக் கல்லூரிகள்,
தொழிற் கல்லூரிகள்,
பயிற்சிக் கல்லூரிகள்,

ஆகிய பல்வேறு நிலைகளைச் சேர்ந்த கல்வி நிலையங்களின் எண்ணிக்கை, சென்ற பதினைந்து ஆண்டுகளில், பூரிப்பும் பெருமையும் அளிக்கத்தக்க அளவு உயர்ந்திருக்கிறது. இது முழு உண்மை; வெறும் புனைந்துரை அன்று.

கல்வி நிலையங்களின் எண்ணிக்கை பெருகுவதும், அங்குச் சென்று கல்வி பயிலும் மாணவர்களின் தொகை கூடுவதும் மட்டற்ற மகிழ்ச்சியையும் உவகையையும் அளிக்கும் செய்திகள் என்பதை எவரும் மறுத்தல் இயலாது.

ஆனால் ஒன்று. கல்வி நிலையங்களின் எண்ணிக்கை பெருகுகிற அதே நேரத்தில் அங்குத் தரப்படுகிற கல்வியின் தரமும் உயர்வடைகிற நிலை இருக்குமானால், மிகச் சிறப்பாக இருக்கும். ஆனால்,

பொதுவாக இந்தியாவை எடுத்துக் கொண்டாலும் சரி, அல்லது சிறப்பாகத் தமிழகத்தை மட்டும் எடுத்துக் கொண்டாலும் சரி, இன்று உள்ள நிலைமை அது அல்ல. கல்வி நிலையங்களின் எண்ணிக்கை பெருகியிருக்கிறதே தவிர அங்குத் தரப்படுகிற கல்வியின் தரம் பெருகவில்லை. தரம் பெருக வில்லை என்பது மட்டுமல்ல; அது முன்னர் இருந்த நிலையை விடத் தாழ்ந்து போயிருக்கிறது.

கல்வியின் தரம் தாழ்ந்து போனதற்கு உரிய காரணங்கள் யாவை? இத் தரக் குறைவை அகற்றி தரத்தை உயர்த்துவதற்கு உரிய வழி முறைகள் என்னென்ன? எந்தெந்த வழிகளைக் கையாண்டால் விரைவாகவும் உறுதியாகவும் தரத்தை உயர்த்த முடியும்? அவ்வாறு உயர்த்தும் பணியில் அரசாங்கத்தார்—ஆசிரியப் பெருமக்கள்—நிர்வாக நன்மக்கள் ஆகிய இம் மூன்று திறத்தாரின் தனித் தனிப் பங்கு எந்த அளவினது—எத் தன்மையது? இந்தக் கேள்விகளுக்கான விடைகளைப் பொறுத்தவரை கருத்து வேறுபாடு இருக்கக் கூடும்; இருக்கிறது. ஆனால், சென்ற பதினைந்து ஆண்டுகளில், அளிக்கப்படுகிற கல்வியின் தரம் தாழ்ந்து போயிருக்கிறது என்னும் உண்மையையும், தரத்தை உயர்த்தியாக வேண்டிய அவசியத்தையும், ஏறத்தாழ எல்லோருமே, ஏகமனதாக ஏற்றுக்கொள்கிறார்கள்.

ஏற்பட்டு விட்ட தரக்குறைவுக்கு உரிய ஒரு முக்கியமான காரணம், போதிய வசதிகள் இல்லாத நிலையிலேயே, அவற்றை உறுதியான முறையில் திரட்டிக் கொள்ளாமலே பல கல்வி நிலையங்கள் தொடங்கப்பட்டிருப்பதாகும். அவசரக் கோலம் அள்ளித் தெளிப்பது என்பார்களே அந்த வகையில், சென்ற பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளில் எத்தனையோ உயர் நிலைப் பள்ளிகள் தமிழகத்தில் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றில் பலவற்றிற்குப் போதிய அளவிலும் தரத்திலும் அமைந்த கட்டிடங்கள் இல்லை; எல்லாப் பாடங்களையும் பயிற்றுவதற்குத் தேவையான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லை; கல்விப் பயிற்சிக்குத் தேவையான கருவிகள் படங்கள் முதலியன இல்லை; தேவையான அளவு சோதனைக் கூடங்கள், விளையாட்டுத் திடல்கள், நூல் நிலையங்கள் முதலியன இல்லை. இவ்வளவு வசதிக் குறைவான நிலையில் தொடங்கி நடத்தப்படும் பள்ளிகளிலிருந்து தரம் உயர்ந்த கல்வியை எப்படி நாம் எதிர் பார்க்க முடியும்?

தமிழகத்தில் உள்ளே தொடக்கப் பள்ளிகள், உயர் நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகிய பல்வேறு கல்வி நிலையங்களின் ஒவ்வொன்றின் நிலையையும் தனித் தனியாக ஆராய்ந்து, ஒவ்வொன்றிலும் தற்போது உள்ள வசதிகள் எவ்வளவு—நியாயமாக இருக்க வேண்டிய வசதிகள் எவ்வளவு என்பதைத் தெளிவாக அறிந்து,

வசதிக் குறைவுகளை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும்.

தொடக்கப் பள்ளிகளிலும் சரி, உயர்நிலைப் பள்ளிகளிலும் சரி, கல்லூரிகளிலும் சரி. ஒவ்வோர் ஆசிரியராலும் பயிற்றுவிக்கப் படுகிற மாணவர்களின் எண்ணிக்கை, அளவுக்கு மீறியதாக அமைந்துள்ளது. அண்மைக் காலத்தில் கல்வியின் தரம் குறைந்து விட்டதற்கு உரிய தலைசிறந்த காரணங்களில் இதுவும் ஒன்றாகும்.

ஒவ்வோர் ஆசிரியராலும் கவனிக்கப்பட வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை குறைந்த அளவினதாக இருந்தால்தான், ஒவ்வொரு மாணவனையும் ஆசிரியர் தனித்தனியே கவனித்து. அவனவனிடம் உள்ள சிறப்பாற்றல்களையும் குறைபாடுகளையும் தெள்ளத் தெளிவாக அறிந்து, தேவையான நடவடிக்கைகள் எடுக்க முடியும். அவ்வாறு எடுக்கக்கூடிய நிலையில்தான். ஒவ்வொரு மாணவனிடமும் உள்ள சிறப்புத் திறன்கள் மேலும் மேலும் வலிவும் பொலிவும் வளர்ச்சியும் எழுச்சியும் பெற்று நற்பயன் நல்க முடியும். அது போலவே. அத்தகைய நிலையில்தான், ஒவ்வொரு மாணவனிடமும் காணப்படக்கூடிய தனித் தனிக் குறைபாடுகள் எத்தன்மையவை என்பது கண்டுபிடிக்கப்பட்டு அகற்றப்பட முடியும். நிலைமை இவ்வாறு இல்லாமல் ஒவ்வோர் ஆசிரியராலும் கவனிக்கப்பட வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை அளவு கடந்ததாக இருக்குமானால், ஒவ்வொரு மாணவன் மீதும் ஆசிரியரால் தனித்தனிக் கவனம் செலுத்த இயலாது. அத்தகைய நிலையில் தரப்படுகிற கல்வியின் தரம் உயர்ந்த அளவினதாக இருக்க முடியாது என்பதை இயம்பவும் வேண்டுமோ ?

சென்ற பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளாகவே தமிழகத்து அரசாங்கத்தார், தனியார் பள்ளிகளுக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளித்து அவை சிறந்து ஓங்குவதற்குத் தேவையான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு மாறாக, அவற்றின் ஆர்வத்தையும் ஆற்றலையும் உற்சாகத்தையும் வசதியையும் குறைக்க வல்லபல நடவடிக்கைகளையே ஒன்றன்பின் ஒன்றாக எடுத்து வந்திருக்கிறார்கள். அண்மைக் காலத்தில் கல்வியின் தரம் குறைந்து போனதற்கு உரிய மற்றொரு முதன்மையான காரணம் இது.

அரசாங்கப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள், ஊராட்சிப் பள்ளிகள் ஆகியவற்றால் அளிக்கப்படும் கல்வியின் தரத்தைவிடத் தனியார் பள்ளிகளால் அளிக்கப்படும் கல்வியின் தரம் மிகவும் உயர்ந்த ஒன்று என்பது, அனைவராலும் ஒப்புக் கொள்ளப்படுகிற ஓர் உயர்ந்த உண்மை. இத்தகைய நிலைமையில், கல்வியின் தரத்தை

உயர்த்துவதுதான் அரசாங்கத்தாரின் நோக்கமாக இருந்தால், அவர்கள் செய்திருக்க வேண்டிய செயல் யாது? தனியார் பள்ளிகள் செழித்து வளர்வதற்குத் தேவையான எல்லாவகை வசதிகளையும் அவற்றிற்கு அளித்து அவற்றை ஓங்கி வளரச் செய்திருக்க வேண்டும் அல்லவா? ஆனால், ஏனோ தெரியவில்லை, அரசாங்கத்தார் அவ்வாறு செய்யவில்லை. அவற்றிற்குத் தேவையான பல புதிய வசதிகளை அரசாங்கத்தார் கொட்டித் தரவில்லை என்பது மட்டுமல்ல உண்மை. அப் பள்ளிகள் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் பெற்றிருந்த பல வசதிகளையும் மடமடவென்று ஒன்றன்பின் ஒன்றாகக் குறைத்து விட்டார்கள். இதன் விளைவாக, மொத்தம் உள்ள கல்வி நிலையங்களில் தனியார் பள்ளிகளின் சத விகிதம், ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறது. அப்படிக் குறைவதால், நாட்டில் அளிக்கப்படுகிற கல்வியின் தரமும் குறைந்து வருகிறது.

ஆசிரியர்களையும் பள்ளிக்கூட நிர்வாகிகளையும் அழைத்து அவர்களுடைய கருத்துரைகளை அறியாமல், திடீர் திடீரென்று, தம் மனம் போன போக்கில், அரசாங்கத்தார், கல்வித் துறையில் பல்வேறு மாறுதல்களைச் செய்து வருகிறார்கள் அல்லவா? இத்தகைய திடீர் மாறுதல்களால் ஏற்படுகிற குழப்பமும் சீர்கேடும் கல்வியின் தரம் குறைந்ததற்கு உரிய வேறு சில காரணங்கள் ஆகும்.

இத்தகைய காரணங்கள் பலவற்றின் விளைவாக, இப்போது உள்ள கல்வி நிலையங்களின் வாயிலாக அளிக்கப்பட்டு வருகிற கல்வியின் தரம் குறைந்த அளவினதாக இருக்கிறது. புதிய புதிய கல்விக் கூடங்களைத் தொடங்குவதில் அரசாங்கத்தார் காட்டுகின்ற அக்கறையிலும் ஆர்வத்திலும் பாதி அளவேனும், இருக்கின்ற கல்விச்சாலைகளின் தரத்தை உயர்த்துவதில் காட்ட வேண்டும். "அகலமாக உழுதால் மட்டும் போதாது; ஆழமாகவும் உழுதாக வேண்டும்." என்னும் பொன்மொழி, உழவுத் துறைக்கு மட்டுமல்ல; கல்வித் துறைக்கும் பொருந்தும். மைய அரசாங்கத்தின் கல்வி அமைச்சர் திருவாளர் சக்ளா அவர்கள், இன்றியமையாத இந்த உண்மையை, தெள்ளத் தெளிவான வகையில் எடுத்துக் கூறியிருப்பது பற்றி நாம் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். அதிலும், இந்தியாவில் உள்ள எல்லாக் கல்வி அமைச்சர்களையும் ஒன்றாக அழைத்து, அவர்களிடத்தில் நேர்முகமாக அவர் இதனை எடுத்துக் கூறியிருப்பது, சாலச் சிறந்த ஒரு செயலாகும்.

மிக முக்கியமான ஓர் உண்மையை மிகத் தெளிவான வகையில் வற்புறுத்திக் கூறியிருப்பதற்காக அமைச்சர் சக்ளா அவர்களுக்கு நம் பாராட்டுக்கள்.

நல்லவர்களா வல்லவர்களா?

திரு. எஸ். மீனாட்சிசுந்தர முதலியார், பி.ஏ., எல்.டி.

இரு வேறு வகைத்து இவ்வுலகம். இங்கு நல்லவர்களையும் காண்கின்றோம். தீயவர்களையும் காண்கின்றோம். அறமும் பாவமும் கலந்த உலகம் இது. முத்திநெறியறியாத மூர்க்கர்களும் உண்டு; பக்தி நெறி பயிலும் பண்புடையாரும் உண்டு. தனக்கெனவே வாழ்வோரையும் பிறர்க்கென எல்லாவற்றையும் கொடுக்கும் பெருந்தகையாளரையும் உலக சரித்திரத்திலே அன்றும் இன்றும் காண்கின்றோம். பயிர் வளரும் இடமெல்லாம் களையும் வளர்கின்றதல்லவா?

தொன்று தொட்டே அறநெறியில் வாழும் சகோதரர்கள் உண்டு. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பறைசாற்றி வந்தது நம் பாரதம். "எல்லோரும் இன்புற்றிருப்பதல்லால் வேறொன்றும் அறியேன் பராபரமே" என்றும், "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றும் குறைவிலாது உயிர் வாழ வேண்டும் என்று பிரார்த்தனை செய்து வந்தது நம் தாய்நாடு.

நன்றே நினைத்து, நன்றே மொழிந்து, நன்றே செய்து வந்த நம் நாட்டிற்கு இப்போது வந்துள்ள பேராபத்தை நாம் அறிவோம். நாம் பிற நாட்டின்மீது ஆசைகொண்டு படையெடுத்ததாகச் சரித்திரம் கூறவில்லை. ஆனால் அந்நியர் நம் நாட்டின்மீது எவ்வளவோ முறை படையெடுத்த வரலாறு சரித்திரம் காட்டும் உண்மை.

நாம் நல்லவர்களாகத்தான் இருந்தோம். ஆனால் வல்லவனான அலெக்சாந்தர் கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்பே நம் நாட்டின் மீது படையெடுத்தான். கடும்போரிட்டு, பல்லோரைக் கொன்று குவித்தான். அவனுக்கு நாம் இழைத்த கொடுமையென்ன? அதன் பிறகு எத்தனை முறை அந்நியர்கள் நம் நாட்டின்மீது படையெடுத்தார்கள்? ஏன் நல்லவர்களுக்கு இத்தனை துன்பம்? நாம் வெறும் நல்லவர்களாக இருந்தோம். அந்த அளவிற்கு வல்லவர்களாக இருக்கத் தவறினோம். அதனால் நேர்ந்த தீமை நமது அடிமை நிலை.

"ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர்; வாராது போல் வந்த மாமணியைத் தோற்போமா"

என்று பாரதியார் ஆயிரம் ஆண்டு நாம் அடிமைகளாக இருந்தோம் என்று பாடுகின்றார்.

மனிதன் நல்லவனாக மட்டும் இருந்திருந்தால் இப்போது உள்ள நிலைக்கு வந்திருக்க முடியாது. இவனைவிட உடல் வலிமை

மிகுந்த மிருகங்களோடு இவன் போராடிய காலம் இருந்தது. உடல் பலம் பெற்றிராவிட்டாலும், அறிவில் வல்லவனாக இருந்த காரணத்தால் இவன் படைப்பில் முதல் இடத்தைப் பிடித்துக் கொண்டான். இந்த நிலை பெற அவன் எவ்வளவு பாடுபட்டு இருக்கவேண்டும்?

இராவணன் வல்லவன். ஆனால் நல்லவனல்லன். நல்லவனாகஇருந்தால் பிறர் மனை நயந்திருப்பானா? அவன் செய்த தவறை எடுத்து நல்லவர்களான அனுமன், அங்கதன், விபீஷணன் முதலியோர் சொன்ன காலத்தில் தன் வல்லமையிலே நம்பிக்கை கொண்டிருந்தபடியால் நல்லவனாக மாற மறுத்துவிட்டான். துரியோதனன் வஞ்சனையால் பாண்டவர்களின் நாட்டைக் கவர்ந்து, பன்னிரு வருடம் அவர்களைக் காட்டுக்குத் துரத்தி விட்டான். இந்த இரண்டு இதிகாசங்களிலும் நல்லவர்கள் அல்லாத வல்லவர்களை வல்லவர்களான நல்லவர்கள் எதிர்த்துப் போரிட்டு வென்றதைக் காண்கின்றோம்.

நல்லவர்கள் அல்லாதவர்கள் கையில் படை பலம், ஆள் பலம், அதிகார பலம் கிடைக்கும் போது, உலகத்தையே அலைக்கழித்துவிடுகின்றனர். ஹிட்லர், முசோலினி போன்றவர்கள் வெறும் வல்லவர்களாக் இருந்தபடியால், உலகம் அடைந்த ஆற்றொண்ணாத் துயருக்கு ஓர் எல்லையுண்டோ? எத்தனை நகரங்கள் அழிக்கப்பட்டன! ஒரு கோடி மக்களுக்கு மேல் கொல்லப்பட்டார்கள்! எவ்வளவு பேர் சாகுமளவும், அங்கஹீனர்களாக அவதிப்பட நேரிட்டது!

கலிங்கத்தின் மேல் படையெடுத்தான் அசோகன். தான் வல்லவன் என்பதை உணர்ந்தான். ஆனால் அவன் வல்லவனாக இருப்பதால் மட்டும் இன்பம் இல்லை என்பதை அறிந்து, தன் வாழ்க்கையை மாற்றிக்கொண்டு நல்லவனானான். வல்லவனாக மட்டும் இருந்த அசோகன் நல்லவனான போது எவ்வளவோ கோடானு கோடி மக்களுக்கு அவன் நன்மை புரிய முடிந்தது!

அன்பு, அருள், பண்பு, சான்றாண்மை போன்ற நல்லியல்புகளை வளர்த்துக்கொள்வதோடு, நாம் ஆண்மை, அஞ்சாமை, வீரம் முதலியவைகளையும்வளர்த்துக்கொள்ள வேண்டும். "வல்லமையற்ற மனிதனுக்கோ, நாட்டிற்கோ இவ்வுலகம் ஒரு நரகம்" என்ற உண்மையை நாம் இப்போது உணர்கிறோம்" என நேருஜி கூறியதை நினைவுபடுத்துகிறேன். நாம் நல்லவர்கள். பிறர் மண்ணைப் பிடிக்கும் பேராசை நமக்கு இல்லை. ஆனால் ஏகாதிபத்திய வெறி பிடித்த யதேச்சாதிகார நாடான சீனா நம் மீது படையெடுத்தது. இன்று பாகிஸ்தான் படையெடுத்திருக்கிறது.

நாம் நல்லவர்களாயிற்றே, யாருக்கும் தீது புரியாதவர்களாயிற்றே, நமக்கு யார் தீங்கிழைப்பார்கள்.

என எல்லோரும் நல்லவர்களாகவே காலந் தள்ள முடியாது என்பதை நாம் உணர்ந்துகொண்டோம். இனி நல்லவர்களாகிய நாம் தற்காப்புக்காவது நம்மண்ணையும் மானத்தையும் காத்துக்கொள்வதற்காவது வல்லவர்களாகவும் வாழத் தெரிந்துகொள்ள வேண்டும்.

"காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா" என்று உடல் நிலையாமை இளைஞர்களுக்குச் சொன்னதல்ல. இரும்பு போன்ற உடல், உருக்குபோன்ற நரம்பு நமக்குத் தேவை. நம் நாட்டிற்குப் பிற நாட்டாரால் ஆபத்து நேரிடும்போது, படையில் சேர எல்லோரும் முன்வர வேண்டும். சேர மனம் இருந்தால் மட்டும் போதுமா? அதற்கேற்ற உடல் வலிமை வேண்டாமா? புலனடக்கம் பேணி, பிரமச்சரியம் காத்து, "உள்ளம் பெருங்கோவில் ஊன் உடம்பு ஆலயம்." என்ற உண்மையை மனதிற் கொண்டு உடலோம்ப உடனே உறுதி பூணுவோமாக! நம் நாட்டிற்கு ஒவ்வாத புகை பிடித்தல் போன்ற தீய பழக்கங்கள் இருந்தால், இன்றே விட்டொழிக்கவும்.

உடலில் வல்லமை பெற்றுவிட்டால் மட்டும் போதாது. மன வலிமை வேண்டும். மகாத்மா காந்தி அடிகள் பருத்த உடலைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் அவர் மன வலிமை அவருக்கு எல்லா வல்லமையையும் அளித்தது. அஹிம்சா நெறியும் சத்தியமுமே அவருக்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தை எதிர்த்து நிற்கும் வல்லமையைக் கொடுத்தது. மகாத்மா மிக மிக நல்லவர்; அதே சமயத்தில் மிக மிக வல்லவர். அவரது வல்லமை பக்தி, தூய்மை, உண்மை, அன்பு, தியாகம் இவைகளின் மேல் எழுப்பப்பட்டது. சர்வ வல்லமையுமுடையவரும் சர்வ நன்மையின் சொரூபமுமான இறைவனைச் சார்ந்தவர்கள் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் இருக்க முடியும்.

நாம் அச்சத்தை அஹிம்சை என்று கருதலாகாது. கோழைத்தனம் அஹிம்சையல்ல. ஒரு போர் வீரனுக்கு உள்ள வீர உணர்ச்சியைவிட அஹிம்சை வழிச் செல்லும்போது அதிக வீர உணர்ச்சி தேவை.

தான் இயற்றிய 1330 அருமைத் திருக்குறளில் வள்ளுவர் எல்லா அறங்களையும்விடக் கொல்லாமைக்குத்தான் முதலிடம் கொடுத்திருக்கின்றார்.

"ஒன்றாக நல்லது கொல்
லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை
நன்று"

ஆனால் அதே ஆசிரியர் உலகத்தில் கயவர்கள் கூட்டம் என ஒன்றிருப்பதை உணர்ந்து, அவர்களை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கும் வழி வகுத்துள்ளார்.

"சொல்லப் பயன்படுவர் சான்
றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்."

தவறு செய்யும் மனிதனுக்கோ நாட்டுக்கோ அற வழியை எடுத்துச் சொன்னால் திருந்தும் ஏற்படும். ஆனால் தான் பலம் படைத்த வல்லவன் என்பதை மட்டும் கருத்திற்கொண்டு தீங்கு செய்யமுற்படுவோரைத் திருத்துவது அஹிம்சை உபதேசத்தின் மூலம் முடியாது. கரும்பு வெட்டவுடன் சாறு கொடுக்குமா? நன்றாகக் கொட்டி திருகிப் பிழிந்தால் சாறு கொடுக்கும். அதே போல் நாம் வல்லவர்களாக அடிக்குப் பதிலடி கொடுக்கும் வல்லமையையும் பெற்றாலன்றி, சுதந்திரத்தைக் காப்பது கடினமெனக் கடந்த சில ஆண்டுகளில் கண்டு கொண்டோம். உடல் பலம், மனோபலம், ஆன்ம பலம் உள்ள வீரர்களாக விளங்கி, நம் நாட்டின்சுதந்திரம், ஜனநாயகம், வாழ்க்கை நெறி, ஒற்றுமை, பண்பு முதலியவற்றைக் காப்போமாக!

(நல்வழி)

ஏற்றுமதி, இறக்குமதி ஆலோசனை கவுன்சில் மார்ச் 19, 20ல் கூடும்.

புது டில்லி, பிப். 19—1966-67க்கான புதிய இறக்குமதி கொள்கை வழக்கம் போல் ஏப். 1-ல் அறிவிக்கப்படும் என்று அதிகார பூர்வமாக இன்று இங்கு கூறப்பட்டது.

ஒத்தி வைக்கப்பட்ட ஏற்றுமதி ஆலோசனை கவுன்சில் மார்ச் 19, 20-தேதிகளில் டில்லியில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப் பட்டது.

கவுன்சில் மெம்பர்கள், அநேக சங்கங்கள் விருப்பத்தின் பேரில் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தைக் காட்டிலும் மார்ச்சில் கூட்டத்துக்கு வருவது அதிக வசதியாக இருக்கும் என்று அவர்கள் தெரிவித்திருந்தனர். கவுன்சில் கூட்டம் பிப். 26, 27 தேதிகளில் நடைபெறுவதாக இருந்தது.

கூட்டம் ஒத்தி வைப்புக்கும், இறக்குமதி கொள்கை அறிவிப்பில் காலதாமதத்துக்கும் அல்லது ஏற்றுமதி வளர்ச்சித்திட்டங்கள் மறுபரிசீலனைக்கு சம்பந்தம் ஏதுமில்லை என்று வர்த்தக அமைச்சக அதிகாரி ஒருவர் இன்று கூறினார். 1966–67க்கான புதிய இறக்குமதி கொள்கை வழக்கம் போல் ஏப்ரல் 1-ல் அறிவிக்கப்படும் என்றார். ஏற்றுமதி வளர்ச்சி திட்டங்களும் இறக்குமதி தகுதிகளும் நீண்டகால, ஸ்திர அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை அப்படியே நீடிக்கின்றன என்று அதிகாரி மேலும் கூறினார்.

தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி : தரம் உயருவதன் அவசியம்

அதிகம் பேர் கல்வி பயின்றால் மட்டும் போதாது. கற்கும் கல்வியின் தரம் உயர்ந்ததாக அமைய வேண்டும். அதற்குப் போதனை முறை, ஆசிரியர்களின் நிலை, நூல்களின் வளர்ச்சி போன்ற மற்ற அம்சங்களைக் கவனித்து திருத்த முறை செய்யும் நோக்கோடு, ராஜ்யந்தோறும் புதிய ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு கல்விக் கழகத்தின் விசேஷப் பொறுப்பு பற்றி, இக்கட்டுரையில், உயர்நிலைப்பள்ளி கல்வித் துணை இயக்குனர் திரு என். எஸ். எஸ். லாரன்ஸ் எழுதியுள்ளார்.

தமிழ் நாட்டில் கல்வி நிறுவனம் ஒன்றை நிறுவ தமிழக அரசாங்கம் தனது உத்தரவு ஒன்றில் அனுமதித்துள்ளது. பாரத நாட்டில் ஏற்பட்டுள்ள பதினைந்து நிறுவனங்களுள் இது ஒன்றாகும். ராஜ்ய திட்ட வரம்பிற்கு அப்பாற்பட்டு, இரண்டு லட்சம் ரூபாய் வரையில் முழு உதவியை இந்த நிறுவனத்திற்கு அளிக்க மத்திய அரசாங்கம் முன் வந்துள்ளது. உயர்நிலைப் பள்ளிக் கல்வி இயக்குனரின் ஆதிக்கத்தின் கீழ் ஒரு தனிப்பட்ட உரிமையுள்ள நிறுவனமாக சென்னையில் 1-7-1965 லிருந்து தொடங்கப் பெற்றது, இம்மாநிலக் கல்வி நிறுவனம்.

தமிழ் நாட்டின் கல்வி வளர்ச்சி

கடந்த சில ஆண்டுகளில் தமிழகத்தில் கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் வசதிகளைப் பெருக்குவதில் வரலாற்றில் கண்டறியாத மிகச் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் கல்வி இன்றியமையாததென்று உணரப்படுகிறது. முன்னூறு மக்கள் உள்ள ஒவ்வொரு இடத்திலும் ஒரு மைல் தூரத்திற்குள்ளாக ஓர் ஆரம்பப் பள்ளி ஏற்பட்டுள்ளது. ஆரம்பப்பள்ளிகளின் எண்ணிக்கை 15 30-3லிருந்து (1948-49) 30,323 (1964-65) ஆக உயர்ந்துள்ளது. உயர்நிலைப்பள்ளிக் கல்வித்துறையில் ஏற்பட்ட முன்னேற்றமும் குறிப்பிடத் தக்கதாகும். உயர்நிலைப்பள்ளிகளின் எண்ணிக்கை 1947-ல் இருந்த 440-லிருந்து 1965-ல் 2100 ஆக உயர்ந்துள்ளது. ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கான வாய்ப்புகளும் பெருகியுள்ளன. கடந்த பத்தாண்டுகளில் மாணவர்களின் எண்ணிக்கை ஆசிரியர் பயிற்சிக் கூடங்களில் 50 சதவீதம் உயர்ந்துள்ளது. சென்னை அரசாங்கம் ஆண்டுதோறும் கல்வித்துறையில், செலவை உயர்த்தி வருவது நல்லதொரு அறிகுறியாகும். 1963-64-ல் கல்விக்கான செலவு

மொத்தச் செலவில் 22·6 சத வீதமாக உயர்ந்துள்ளது.

தர வளர்ச்சியின் அவசியம்

தமிழ் நாட்டில் சிறந்த அளவில் கல்வி வளர்ச்சி ஏற்பட்டுள்ளதைக் கண்கூடாகக் காண்கிறோம். இன்று பள்ளிகளில் தர வளர்ச்சி ஏற்படுவதன் அவசியத்தை உணர்வதற்கான நேரம் நெருங்கிவிட்டது. இது மத்திய அரசாங்கம் மற்ற அரசாங்கங்களின் கல்வித்துறையின் கவனத்தைச் சில காலமாகக் கவர்ந்தது. ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் பயிற்சியை ஆய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆய்வுக்குழு இப் பிரச்னையை ஆராய்ந்து முதல் நடவடிக்கையாக மாநிலக் கல்வி நிறுவனம் ஒன்றை ஒவ்வொரு அரசாங்கத்திலும் நிறுவ முடிவு செய்தது.

கல்வி மட்டுமல்லாமல் நல்ல கல்வியைப் பெறுவது சுதந்திர ஜனநாயகக் குடியரசின் பிறப்புரிமை என்று எல்லா மூலைகளிலும் உணரப்படுகிறது. கல்வியின் தரம் உயர்ந்ததாக இருக்க வேண்டும். பள்ளிகளின் எண்ணிக்கை உயர்ந்து கல்வியின் தரம் தாழ்வதில் லாபமொன்றுமில்லை. இத்துறையில் ஈடுபட்டுள்ள மக்கள் புதிய மனோநிலைகளையும் திறமைகளையும் ஏற்று, தரத்தை உயர்த்த வேண்டும். பள்ளியின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும். பள்ளியின் கல்வித்தரத்தை உயர்த்தும் வழி துறைகளை, அவர்கள் காண வேண்டும். அளவும் தரமும் ஒத்து இயங்கவேண்டும்.

தமிழ் நாட்டுக் கல்வி நிறுவனம்

இந் நோக்கத்துடன் இம்மாநிலக் கல்வி நிறுவனம் தொடங்கப்பட்டது. இக்கல்வி நிறுவனம் ஒரு புதிய பரிசோதனையாகும். கல்வியின் தரத்தை உயர்த்துவது இதன் அடிப்படைக் கடமையாகும். இந்தியக் கல்விக் கமிஷனின் செயலாளர் ஜே. பி. நாயக் கூறியது.

"கல்வித் தரத்தினைச் சீர்திருத்தி உயர்த்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட மாநிலக் கல்வி நிறுவனம் கல்வி துறையில் ஒரு தனிப் பிரிவாகும்."

மாநிலக் கல்வி நிறுவனத்தின் நோக்கங்கள்

கீழே கொடுக்கப்பட்டுள்ளவை; தமிழ் நாட்டுக் கல்வி நிறுவனத்தின் நோக்கங்களாகும் :—

(1) ஆரம்பப் பள்ளிகளைக் கண்காணிக்கும் தணிக்கை அதிகாரிகளுக்கும், பயிற்சிப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும் தமது வேலைக் காலத்தில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மூன்றுமாத காலப் பயிற்சி அளிப்பது.

(2) ஆரம்ப கல்விப் பிரச்னைகள் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின், பயிற்சி சிறப்பாக ஆதாரப் பள்ளிப் பாடங்களைக் கற்பித்தல் போன்றவற்றை ஆய்ந்தறிதல்.

(3) ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் விஸ்தரிப்பு வேலை

(4) ஆரம்பப் பள்ளிகளுக்கும் ஆசிரியர்களுக்குமான நூல்களை வெளியிடுதல் (போதனு முறைப் புத்தகங்களைச் சேர்த்து)

(5) பயிற்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கும் ஆரம்பக் கல்வி சம்பந்தப்பட்ட தணிக்கை அதிகாரிகளுக்கும் வேலையில் சேரும் பொழுது புதிய பயிற்சி அளித்தல்.

(6) ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் விஸ்தரிப்பு வேலையை ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுடன் தொடர்புபடுத்துதல்.

வகிக்கும் பாகமும் ஆற்றலும் கடமைகளும்

கல்வி நிறுவனங்களின் முதல்வர்களும், துணை முதல்வர்களும் 1964-ல் புது டில்லியில் நடத்திய ஆய்வுக் கூடத்தில் மாநிலக் கல்வி நிறுவனத்தின் கடமைகளைப் பின்வருமாறு வரையறுத்துள்ளனர்.

முதன் முதலாக நியமிக்கப்பட்ட மேற்பார்வையாளர்களுக்கும் ஆசிரியர்களின் பயிற்சியாளர்களுக்கும் சிறந்த பயிற்சியளித்தல்.

ஆரம்பப் பள்ளிகளைக் கண்காணிக்கும் தணிக்கை அதிகாரிகளுக்கும், ஆசிரியர்களின் பயிற்சியாளருக்கும் எப்போதும் கல்வித் துறையின் கருத்தின்படி ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மூன்று மாதக் கல்விப் பயிற்சி அளித்தல்.

காலந்தோறும் மாவட்டக் கல்வி அதிகாரிகளும், மேலதிகாரிகளும் ஒன்று கூடுவதற்கான பெரிய கூட்டங்களையும், சிறிய மன்றங்களையும் கூட்டுவித்தல். (ஆண்டிற்கொரு முறையாவது இவ்வாறு கூடுதல் வேண்டும்.)

ஸ்தல ஸ்தாபனங்களின் அரசுச்சார்பற்ற அதிகாரிகளுக்கும், இத்தகைய பெரிய கூட்டங்களையும் கருத்தரங்குகளையும் கட்டுவித்தல்.

ஆரம்பப் பள்ளிகளின் அருகிலேயே விஸ்தரிப்பு சேவை மையங்களை நிறுவுதல்; கண்காணித்தல்.

பயிற்சி நிலையங்களில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கான விஸ்தரிப்பு சேவையைத் தோற்றுவித்தல்.

மாநிலக் கல்வி நிறுவனத்தின் அலுவலர்கள் மூலமாகவும், மற்ற கல்வி நிலையங்களின் மூலமாகவும் ஆராய்ச்சிகளை நடத்தல்.

காலந்தோறும் கல்வித் துறையின் கருத்தின்படி ஆசிரியர் பயிற்சித் திட்டத்தைச் சீர்திருத்துதல். சிறப்பாக மத்திய கல்வித் துறையால் திட்டமிடப்பட்ட ராஜ்யக் குழுக்களை, அல்லது ஆசிரியர் பயிற்சிக் குழுவை நிறுவுதல்.

பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் பற்றுக்குறையைப் போக்கவும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் தரத்தை உயர்த்தவும் கடிதப் போக்குவரத்து மூலமாகப் பயிற்சி அளித்தல்.

கல்வியின் தொடர்பான நூல்களை வெளியிடுதல்.

காலந்தோறும் இராஜ்யக் கல்வித் துறையால் கொண்டுவரப்படும் கல்வித் திட்டங்களை மதிப்பிடுதல்.

பாடப் புத்தகங்களை மாற்றியமைத்தலிலும் அவற்றின் தரத்தை உயர்த்துதலிலும் உதவுதல்.

கல்வியை வளர்க்க ஏற்ற பரிசோதனைகளை நடத்துதல்.

பாடத் திட்டங்களையும் போதனை முறைகளையும் நன்கு விருத்தி செய்ய புதிய சாதனங்களைக் கண்டுபிடித்தல்.

கல்வி வளர்ச்சியின் அவசியத்தையும், கல்வித் தரத்தின் இன்றியமையாமையையும் பொது மக்களுக்கு உணர்த்துதல்.

கல்வித் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றுவதில் கல்வித் துறையோடு ஒத்துழைத்தல்.

தமிழ் நாட்டுக்கல்வி நிறுவனத்தின் தலை நோக்கங்கள் 1) ஆராய்ச்சி; 2) வேலை காலத்திலும் பயிற்சி 3) விரிவுபடுத்துதல் 4) நூல்களை வெளியிடுதல்.

மேற்பார்வை அபிவிருத்தியும், நிர்வாக அபிவிருத்தியும்

கண்காணிப்பையும், தணிக்கையையும் கல்வி நிர்வாகத்தையும் சிறந்த முறையில் விருத்தி செய்வதே தமிழ்நாட்டுக் கல்வி நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். தணிக்கை அதிகாரிகளும், தம்முடைய கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற சிறப்புப் பயிற்சி பெறுவது அவசியமாகும். அவர்களுடைய பணி நிலையையும் முறைகளையும் மாற்றிக் காள்வது அவசியமாகும். திறமையை வளர்ப்பதற்கான ஆராய்ச்சிகளையும் புத்தகங்களை வெளியிடுகலையும் மேற் கொள்ளுதல் வேண்டும்.

ஆசிரியர் கல்வி அபிவிருத்தி

பள்ளியின் கல்வித் தரத்தை உயர்ந்த ஆசிரியர்களின் தரத்தை உயர்த்த வேண்டும். ஆதலால் ஆசிரியர் கல்வி தர உயர்வும் மிகவும் அவசியமாகும். இது இக்கல்வி நிறுவனத்தின் பொறுப்பாகும். ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்காகப பயிற்சிக் கூடங்களில் அளித்த வசதிகள், பின்பற்றிய முறைகள், செய்த மதிப்பீடு, நிறைவேற்றிய செயல்கள் முதலியவற்றை ஆராயவேண்டும். ஆசிரியர்களின் பயிற்சியாளர்களுக்கும் தமது ஊழிய காலத்திலேயே பயிற்சி அளிக்கவேண்டும். விஸ்தரிப்பு வேலையும் ஆசிரியப் பயிற்சிகளுக்கான நூல்களைக் குறித்து பரிசோதனை வேலையும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தரமான கல்வி புகட்டுதல்

ஆரம்பப் பள்ளிகளில் தரமான கல்வியைப் புகட்டுவது மாநிலக் கல்வி நிறுவனத்தின் முக்கிய கடமையாகும். ஆரம்பப் பள்ளிகளில் வீணாவதையும் தேக்கத்தையும் குறைத்தல் வேண்டும். ஆசிரியர்களுக்கான கைப்புத்தகங்களை வெளியிட வேண்டும். இக்

கல்வி நிறுவனம் பாடத்திட்டத்தையும், போதனை முறைகளையும் பாடப் புத்தகங்களையும் நன்கு விருத்திசெய்வதில் ஈடுபடும்.

ஆராய்ச்சியும் மதிப்பிடுதலும்

திறமைமிக்க ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும். ஆராய்ச்சி வேலை செயல் ஆற்றல் கொண்டதாகவும், விரைவில் பயன்தரக் கூடியதாகவும் அமைய வேண்டும். புள்ளி விவரங்களும் தேவையான செய்திகளும் இங்கு எக்காலத்தும் கிடைக்கும். பொது மக்கள் தொடர்பு அனுவலகமாகவும் இக்கல்வி நிறுவனம் விளங்கும். செய்திக் கடிதங்களையும் இதழ்களையும் ஆசிரியர்களுக்காக அச்சிட முயற்சி செய்ய வேண்டும்.

வளர்ச்சிப் பிரிவு

உயர்தரக் கல்வியின் வளர்ச்சிப் பிரிவே தமிழ் நாட்டுக் கல்வி நிறுவனமாகும். கல்வித்துறையின் முன்னேற்றப் பிரிவு எனவும் இதைக் கருதலாம். பொறியியல் மருத்துவத் துறைகளில் உள்ளதைப் போலவே கல்வித் துறையிலும் வளர்ச்சிப்பிரிவு அவசியமானது. இக் கல்வி நிறுவனத்திற்கு உயர்ந்த நிலையையும் பெருமையையும் தரவேண்டும். உயர் நிலைப் பள்ளிக் கல்வி இயக்குனரைத் தலைவராகவும் நிறுவனத்தின் முதல்வரைச் செயலாளராகவும் மத்திய கல்வித்துறை என். ஸி. இ. ஆர். டி. பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு குழு திட்டங்களை வகுப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும், வழிகாட்டும் செவி பார்வையுணர்வு, கல்விப் பிரிவு, விஞ்ஞான நிலையம் விஸ்தரிப்பு சேவை, அதிகாரிகள் ஆராய்ச்சிப் பிரிவுத் தொழில் விளக்கப் பிரிவு மதிப்பீடு அதிகாரிகள் முதலிய பிரிவுகளும் அதிகாரிகளும் இக் கல்வி நிறுவனத்தின் கீழ் பணியாற்றுமாறு செய்ய வேண்டும். தேசம் முழுவதும் பரவியுள்ள இயக்கத்தில் தமிழ் நாட்டுக்கல்வி நிறுவனம் முக்கியமாகும். இன்று தேவைப்படுவது அளவு அல்ல; தரமேயாகும். மிக்க ஆர்வத்துடனும் ஆழ்ந்த நம்பிக்கையுடனும் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்வி நிறுவனம் வாய்ப்பும் வசதியும் பெறின் தன்னிடத்தில் ஒப்படைக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுமென்பதில் ஐயமில்லை.

புது டில்லியில் முதல்வர்கள் ஆய்வுக் கூடத்தில் மத்திய கல்வி அமைச்சர் திரு எம். சி. சாக்ளா கூறியதாவது.

“மக்களிடையே கல்விக்கான அறிவுப் பசி ஏற்பட்டுள்ளதால் எதிர் காலத்தில் மேலும் அபிவிருத்தி ஏற்படக் கூடும். தற்போதைய சந்தர்ப்பத்தில் அதிகமாகத் தேவைப்படுவது தரத்தின் உயர்வேயாகும். இந்நோக்கத்துடன் தான் மாதிரிக் கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

—“தினமணி”

இந்துமகா சமுத்திரம் பேசுகிறது

இந்துமகா சமுத்திரம் பேசுகிறது:—

எனது கதையைக் கேளுங்கள்.

உலகிலேயே மிகவும் தனிமையான கடல் நான்தான்.

எனது சகோதரிகளான அட்லாண்டிக், பசிபிக் கடல்களைப் போல என்னிடம் அதிகமான திட்டுகளோ, தீவுகளோ அல்லது பவளப் பாறைகளோ கிடையாது.

இந்தியா, இலங்கை ஆகியவற்றின் மதன் கரைகளை அகசில கொண்டு தென்துருவம் வரை 5000 மைல் தூரத்திற்கு நான் பள்ளிகொண்டிருக்கிறேன்.

எனது பரப்பு 280 லட்சம் சதுர மைல்.

பாகிஸ்தான் உள்பட இந்திய உப-கண்டத்தின் மொத்தம் பரப்பு 11,27,345 லட்சம் சதுர மைல்.

பூமியில் உள்ள மொத்தக் கடல் பரப்பில் நான் ஐந்தில் ஒரு பங்கு.

என்னிடம் அடங்கியுள்ள தண்ணீரின் எடையும் உப்பின் எடையும் கணக்கில் அடங்காது.

என்னை வற்ற வைக்க இயலாது.

எனது உப்பு மனித வர்க்கம் முழுவதற்கும் என்றென்றும் போதுமானது.

உலகமக்கள் அனைவருக்கும் ஒரு வருடத்திற்கு 22 இலட்சம் டன் உப்புதான் தேவை.

என்னுடைய அடி வயிற்றில் தங்கம் உட்பட சுமார் 50 உலோகங்கள் உள்ளன.

மற்றும் 20 கோடி கிலோ வாட் மின்சக்தி என்வசம் உள்ளது.

ஏராளமான ஜீவராசிகள் வசிக்கும் தனி உலகமாக நான் காட்சி அளிக்கிறேன்.

இரு அமெரிக்கக் கண்டங்களும், ஆபிரிக்க கண்டமும் சேர்ந்துள்ள பரப்புக்குச் சமமாக இருக்கும் எனது பரப்பு.

சந்திர மண்டலத்தின் பரப்பு எம்மாத்திரம்?

அதைப்போல எனது பரப்பு இரு மடங்கு பெரியது.

இந்தியாவைப் பல படையெடுப்புகளிலிருந்து பல நூற்றாண்டுகளாகப் பாதுகாத்து வந்திருக்கிறேன்.

நான் இந்தியாவின் 'ஏரியாகவே' இருந்து வந்திருக்கிறேன்.

கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு இந்திய மன்னர்கள் என்மீது கப்பல்களைச் செலுத்திப்பல நாடுகளில் தமது ஆட்சியை ஏற்படுத்திக் கொண்ட காலத்தை நான் அறிவேன்.

இந்தியாவின் நாகரிகத்தையும் கலாசாரத்தையும் பல நாடுகளுக்கும் பரப்ப உதவியாக இருந்திருக்கிறேன்.

இந்தியாவின் சரித்திரத்துடன் நான் பின்னிப் பிணைந்திருக்கிறேன்.

"தினமணி"

‘சம நோக்கு’

சோவியத் யூனியன் பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை விற்கப் போகிறதாம். இந்தியாவுக்கு விற்கின்ற அதே விதிகள், நிபந்தனைகளின் பேரில் பாகிஸ்தானுக்கும் சப்ளை செய்யுமாம்! சோவியத் சர்க்கார் இதற்கு சம்மதம் அளித்திருப்பதால் விரைவில் ஆயுதங்களை வாங்க ஏற்பாடுகள் செய்யப்படுமாம். கடனாகத் தருவதற்கு வட்டி இரண்டரை சதமாம்! இத்தகைத் தகவல்களையும் “டான்” என்ற கராச்சி ஆங்கில தினசரி வெளியிட்டுள்ளது. இப்பத்திரிகை அதிபர் அயூப்கானுடன் நெருங்கிய தொடர்பு உள்ளது.

“டான்” செய்தியில் சொல்லியிருப்பதெல்லாம் உண்மைதானா என்பதை நாம் அறியோம். அதைப் பற்றி இப்பொழுது அபிப்பிராயம் கூறவும் நாம் விரும்பவில்லை. ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் இத்தருணத்தில் சுட்டிக் காட்டவேண்டிய அவசியமுண்டு. இதே நிபந்தனைகளின்படி இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் அமெரிக்கா ஆயுதங்களை விற்கும் என்று செய்தி வந்திருந்தால், அப்பொழுது எவ்வளவு கூச்சல் இந்நாட்டில் கிளம்பியிருக்கும் என்பதை மட்டும் வாசகர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.

வள்ளுவப் பெருந்தகை

தெய்வப் புலவர் திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறள், எந்த ஒரு நாடும் ஏடும் போற்றி வழிபடத்தக்க பெருமைக்குரியது; காலம் கடந்தது; ஞாலம் அறிந்தது; சாகாவரம் பெற்றது. இதன்கண் இல்லாதது இவ்வுலகில் இல்லாததே.

1330 அருங்குறட் பாக்களும் உலகின் ஆழ அகலங்களை விவரித்து நிற்பன; மனித சமுதாயத்தின் அடிப்படைத் தத்துவத்தைக் காண்பிப்பன; வீட்டுக்கு விளக்காகவும், நாட்டுக்குக் கலங்கரை விளக்காகவும், உலகுக்குப் பேரொளியாகவும் விளங்குவன. அப்படிப்பட்ட அமுதத் துளிகளை அள்ளித்தந்த செல்வரை யாரே போற்றுதார்?

எனவே, ‘பொதுமை’ அரங்கில் நின்று, ‘மெய்ப்பொருள்’ கண்ட வள்ளுவப் பெருந்தகைக்குச் சிலை சமைத்து வெற்றி விழா எடுத்த மாநகராட்சியை வாழ்த்துகிறோம். ஆயிரம் நூல்களைப் படித்து வாழ்நாளை வீழ்நாளாக்குவதைக் காட்டிலும், ‘திருக்குறள்’ ஒன்றைப் படித்து, அதன்படி இனிமேலாவது நடக்க முன்வருவது நமது தலையான கடமையாகும். அதுவே வள்ளுவருக்கு நாம் செய்யும் கைம்மாறு.

—ஆசிரியர்

ஏற்றம் பெறுவதற்கு ஏழு விழிகள்

'மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்' என்று சொல்லிக் கொண்டே சோட்டாவி விடுகின்றவர்களைக் காண்கிறோம். கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுக்கும்' என்று சோம்பிக்கிடக்கின்றவர்களையும் காண்கின்றோம்.

மரம் வேண்டுமானால் சும்மா கிடக்கலாம்; ஆனால் மனிதன் அப்படி இருக்க முடியுமா? தன் வாழ்வைத் தானே தான் தேடிக் கொள்ள வேண்டும். பெருமைக்கும் சிறுமைக்கும் அவரவர் கருமமே (செயலே) கட்டளைக்கல் என்பதுதான் நமது முன்னோர்களின் முறை.

எப்படி ஏற்றம் பெறுவது? இதோ எளிய ஏழு வழிகள்; ஒத்து வருகிறதா பாருங்கள்!

1. **ஒரு வேலையில் ஈடுபடும் போது அதில் உங்கள் முழு ஆற்றலையும் ஈடு படுத்துங்கள்.**

பெரும்பாலோர் எந்த வேலையையும் 'ஏதோ செய்தோம்' என்னும் போக்கில்தான் செய்கின்றனர். செயல் தங்களை மீறிப் போகும்போது 'அடடா அப்போதே செய்யாமல் விட்டுவிட்டோமே' என்று நொந்து கொள்வது உண்டு. அப்படி இல்லாமல் எந்த வேலையைச் செய்தாலும் உங்களுடைய முழு ஆற்றலையும் அதில் செலுத்துங்கள்; நீங்களே திகைக்கும் படியான முடிவு காணலாம்.

2. **செய்ய நினைப்பதைச், செம்மையாக எண்ணிப்பார்த்து உங்கள் நிலையில் உறுதியாக நில்லுங்கள்.**

எந்தச் செயலுக்கும் முதலில் எதிர்ப்புத் தோன்றுவது இயற்கைதான். இத்தனை பேர் எதிர்க்கின்றார்களே என்று சோர்ந்துவிடாமல் உங்கள் குறிக்கோளில் முழு மனத்தைச் செலுத்தி உறுதியோடு நில்லுங்கள்; எதிர்ப்புக்கள் மெல்ல மறையும்.

3. **உங்களுடைய குறிக்கோள் என்ன என்பதைத் திட்டவட்டமாகத் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.**

'இது என்குறிக்கோள்' என்று சுட்டிக் காட்டக்கூடிய வகையில் உங்களுடைய நோக்கம் இருக்க வேண்டும் 'எப்படியாவது உயர வேண்டும்' என்று எண்ணினால் போதாது. இப்படி ஆகவேண்டும் என்று ஒரு குறி இருக்க வேண்டும்- அப்போதுதான் நமது

முயற்சிகள் எந்தத் திசைநோக்கிச் செல்லவேண்டும் என்பது நமக்குத் தெரியும்.

4. தேவை எது என்பதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

எதையாவது செய்யலாம், எப்படியாவது ஆகட்டும் என்று இருக்காமல், எதைச் செய்ய வேண்டும் என்று நினைக்கின்றீர்களோ, அதற்குச் சமுதாயத்தில் தேவை இருக்கிறதா என்பதைப் பார்த்துச் செய்யுங்கள். வெய்யில் காலத்தில் கம்பளிப் போர்வை வியாபாரத்தை விட 'ஐஸ் மோர்' வியாபாரம் இலாபம் தரும் அல்லவா?

5. பிறர் துணை பேணுங்கள்.

'எனக்கு நானே இராசா' என்ற போக்கை விட்டுவிட்டுப் பிறர் யோசனையையும் கேளுங்கள். அவர்களது துணையையும் நாடுங்கள்.

6. கருமமே கண்ணாக இருங்கள்.

குறிப்பிட்ட ஒரு வேலையைச் செய்து முடிக்கும் வரை அந்த நினைப்பில்தான் உங்களது மனம், வாக்கு அனைத்தும் இருக்க வேண்டும். குதிரைக்குக் கண்பட்டம் இருப்பது போல் உங்கள் கவனத்திற்கு ஒருகுறியை வைத்துக்கொள்ளுங்கள்.

7. நாளைக்கு என்று எதையும் தள்ளிப் போட வேண்டாம்.

'சரி நாளைக்குப் பார்த்துக் கொண்டால் போயிற்று' என்று எந்தக் காரியத்தையும் தள்ளிப் போடவேண்டாம். நாளை நாம் இல்லை என்று நினைத்துக் கொண்டு ஒவ்வொரு நாள் காலையிலும் இன்று இன்னின்ன காரியங்களைச் செய்து முடிப்பேன் என்று ஒரு பட்டியல் போட்டுக் கொள்ளுங்கள். அந்தப் பட்டியல்படி அன்றைக்குள் எல்லாவற்றையும் முடித்து விடுங்கள்.

இப்படிச் சில விதிகளைப் பின்பற்றினால்,

ஏற்றம் பெறுவது எளிது தான்!

—"அறுவடை"

பணக்காரக் குழந்தைகளுக்கு பள்ளிகளில் கட்டணம் விதிக்கலாம்

மேல் சபையில் ஒரு மெம்பரின் கருத்து

ராஜ்ய திட்டங்கள்மீது விவாதம் ஆரம்பம்

சென்னை, மார்ச். 25—ராஜ்ய அபிவிருத்தித் திட்டங்கள் மீது விவாதம் நடத்தலாம் என்று கைத் தொழில் மந்திரி வெங்கட்ராமன் மேல் சபையில் பிரேரணை கொண்டு வந்தார். அதன் மீது இன்று விவாதம் ஆரம்பமாயிற்று. டாக்டர் எச். வி. ஹாண்டே விவாதத்தை ஆரம்பித்து வைத்தார். போட்டா போட்டி பொருளாதார ஏற்பாட்டில்தான் உணவு உற்பத்தியைத் துரிதமாகப் பெருக்க முடியும் என்றும் கட்டுப்பாடு இல்லாத பொருளாதார ஏற்பாட்டில் வியாபாரிகள் கொள்ளை லாபம் அடிக்க முயற்சிக்க மாட்டார்கள் என்றும் அவர் கூறினார். எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி அளிப்பதை வரவேற்பதாகவும் ஆனால் பணக்கார குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்குக் கட்டணங்கள் விதிக்கலாம் என்றும் யுத்த அடிப்படையில் ஜாகைப் பிரசனையைத் தீர்க்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் சர்க்கார்துறை தொழில் நிறுவனங்களின் நிர்வாகப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பு அவர்களுக்குத் தொழில் துறையில் பயிற்சி அளிக்க வேண்டும் என்று திரு. சாம்பசிவ ரெட்டியார் கூறினார். சேலம் ஜில்லாவில் ஒரு கலைக் கல்லூரி, ஒரு வைத்தியக் கல்லூரி, ஒரு பாலிடெக்னிக் முதலியன ஏற்படுத்த வேண்டும் என்று அவர் கூறினார்.

சர்க்கார் தற்போது பின்பற்றி வரும் பொருளாதாரக் கொள்கையை திரு. எஸ். டி. சுந்தரம் ஆதரித்துப் பேசினார். பல பொருளாதாரப் பிரச்னைகளைச் சோஷலிசம் மூலமாகவே தீர்க்க முடியும் என்று அவர் கூறினார்.

உணவுப் பொருள்களையும் மற்ற அத்யாவசியப் பொருள்களையும் நியாயமாக வழங்குவதற்குச் சர்க்கார் தலையிட்டு வேண்டுவன செய்யவேண்டும் என்று திரு. தியாகராஜன் கூறினார்.

பள்ளிக் கல்விக்குக் கட்டணம் விதிக்கக்கூடாது என்றும் எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்றும் திரு. ராஜா ஐயர்

கூறினர். பராமரிப்புக்காகப் பள்ளிக் குழந்தைகளிடமிருந்து விசேஷக் கட்டணம் வசூலிக்கலாம் என்று அவர் கூறினர். ரூ. 5 வீதம் 2 தவணைகளில் பள்ளிப் பராமரிப்புக் கட்டணம் வசூலிக்கலாம் என்று அவர் கூறினர். பள்ளிக் குழந்தைகளின் ஆரோக்கியத்தைச் சரிவரப் பாதுகாக்க வேண்டும் என்றும், பள்ளிகளின் சோதனைக் கூடங்களில் தரமான தளவாடங்களை வைத்திருக்க வேண்டும் என்றும் அவர் கூறினர். ஆசிரியர்களின் உத்தியோக வசதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றும், அப்படியானல் தான் திறமையுள்ளவர்கள் அந்தத் தொழிலுக்கு வருவார்கள் என்றும் அவர் கூறினர்.

ஆரம்பத்தில் 1965 - 66க்கான துணை மதிப்பீட்டை முதல் மந்திரி சமர்ப்பித்தார்.

புதுமுறை சங்க வாய்பாடு

V.K. சேஷாத்திரி. B.A., L.T.

(Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

இந்திய - யு. எஸ். கல்வி நிலையம்

ஜான்ஸன் யோசனை

கல்வியின் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கும் வகை செய்யும் இருநாட்டு நிலையம் ஒன்றை அமெரிக்காவும் இந்தியாவும் சேர்ந்து அமைக்க வேண்டுமென்று ஜனாதிபதி ஜான்ஸன் யோசனை கூறியுள்ளார்.

ஆரம்ப மானியமாக, இந்த நிலையத்துக்கு அமெரிக்கா ரூ. 1425 கோடி வழங்கவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். அமெரிக்காவின் கையிருப்பிலுள்ள ரூபாய் நிதியிலிருந்து இந்தத் தொகை வழங்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்திக்கு வெள்ளை மாளிகையில் மார்ச் 18-ம் தேதி விருந்து அளித்தபோது ஜனாதிபதி ஜான்சன் இந்த யோசனையை வெளியிட்டார். யோசனையைத் திருமதி காந்தி வரவேற்றார். "மக்களோடு மக்கள் ஒத்துழைப்பதை நிலைநிறுத்தி விரிவாக்கும் முயற்சிகள் அனைத்தும் நன் முயற்சிகளே, வரவேற்கத் தக்கனவே. என்றார் அவர்.

ஜனாதிபதி ஜான்சன் தமது விருந்துரையில் பின்வருமாறு கூறினார் :

"இன்று நான் பிரதம மந்திரி காந்தியின் வருகையைக் குறிக்கும் பொருட்டு ஒரு யோசனை கூறுகிறேன்: இந்திய நாட்டிலுள்ள ஆராய்ச்சி மனம் படைத்த இளைஞர்களின் நன்மைக்காக ஒரு நிலையான அறக்கட்டளை நிறுவுவோம்.

"பிரதம மந்திரி அவர்களே, உங்கள் அரசாங்கத்தின் அனுமதியுடனும்—அமெரிக்கச் சட்டமன்றத்தின் அனுமதியுடனும்—நாம் தீர்க்கதரிசனம் வாய்ந்த ஒரு புதிய முயற்சி, ஓர் இந்திய—அமெரிக்க நிலையம், தொடங்கலாமா ?

"இந்த நிலையம் இந்தியாவில் நிறுவப்படவேண்டும்; இந்தியச் செலாவணியில் அமெரிக்கா பெற்றுள்ள பணத்தில் 30 கோடி டாலர் அதன் அறக்கட்டளையாக இருக்கவேண்டும் என்பது என் யோசனை. இந்தப் புதிய முயற்சியுடன் உலகம் நெடுகிலுமுள்ள மற்ற அற நிலையங்களும் ஒத்துழைக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

"சுதந்தரமான ஒரு தனிக் கழகமாக இந்த நிலையம் அமைக்கப்பட வேண்டும். நம்மிரு நாடு

களின் புகழ்மிக்க பெருமக்கள் அதன் டைரக்டர்கள் குழுவில் இடம் பெற வேண்டும்.

"கல்வியின் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றத்துக்கு ஊக்கமளிக்கும் விரிவான சாசனம் ஒன்றைப் புதிய நிலையம் பெற்றிருக்க வேண்டும் என்றும் நான் கூறுவேன். விஞ்ஞானம் முன்னேறவும் — ஆராய்ச்சிக்கு ஊக்கமளிக்கவும்—பண்ணையிலும் ஆலையிலும் புதிய போதனை முறைகளை வளர்க்கவும்—நெடுங்காலப் பிரச்னைகளை வெல்லப் புதிய வழிகளுக்குத் தூண்டுதல் அளிக்கவும் அது வகை செய்ய வேண்டும்".

புதிய நிலையம் பற்றிச் செய்தி நிருபர்களிடம் விளக்கம் கூறிய அமெரிக்க அதிகாரிகள், சிறிது காலமாகவே இந்த யோசனை இரு நாட்டு அரசாங்கங்களின் பரிசீலனையிலும் இருந்து வந்துள்ளது என்று தெரிவித்தனர். நிலையம் நிரந்தரமாக இருக்குமென்றும், டைரக்டர்கள் விரும்பினால், அதன் மானிய நிதியின் வருவாயிலிருந்தே செலவுகள் ஈடுசெய்யப்பட்டு எப்போதும் அப்படியே நடந்துவரும் என்றும் அவர்கள் கூறினார்கள்.

ஏற்கெனவே இந்தியாவில் செயலாற்றி வரும் வேறு அமெரிக்க நிலையங்கள் தமது சொந்த அனுபவங்களைத் தெரிவித்தும், தமது சொந்த நிதிகளைக் கொடுத்துங்கூடப் புதிய நிலையத்துக்கு உதவி புரியுமெனஅதிகாரிகள் எதிர்பார்க்கிறார்கள்.

செனட் சபையின் பெரும்பான்மைக் கட்சித் தலைவர் ஆதரவு

கல்வி வளர்ச்சிக்காக இந்தியா-அமெரிக்க நிலையம் ஒன்று ஏற்படுத்த ஜான்ஸன் தெரிவித்துள்ள யோசனையை செனட் சபையின் பெரும்பான்மைக் கட்சித் தலைவர் மைக் மான்ஸ்பீல்டு பாராட்டியுள்ளார். "இலட்சியத்தைச் செயலுடன் இணைப்பது அது" என்று அவர் குறிப்பிட்டார்.

செனட் சபையில் பேசுகையில் செனட்டர் மான்ஸ்பீல்டு கூறியதாவது:-

ஜனாதிபதி ஜான்ஸன் உத்தேசித்துள்ள இந்த இருநாட்டு நிலையம், அமெரிக்காவில் கல்விக்கு முக்கியமான உதவி அளிக்கும் பெரிய நிலையங்களின் அடிப்படையிலேயே திட்டத்தட்டச் செயல்படும் என்று நான் நினைக்கிறேன்.

விஞ்ஞானம், தொழில்நுட்பம், விவசாயத் துறைகளில் புதிய சோதனைத் திட்டங்களுக்கு நிலையம் ஊக்கம் அளிக்கும்.

இந்தியச் சட்டங்களின்படி அது அமைக்கப்படும்; வளர்ந்து வரும் நாடுகளின் தேவைகளை

நன்கறிந்த இந்தியத் தலைவர்கள் ஒன்பது பேரையும் புகழ்பெற்ற ஒன்பது அமெரிக்கர்களையும் கொண்ட ஒரு சுதந்திரமான போர்டு அதை நிர்வகிக்கும்.

அது மானியம் வழங்கும் ஒரு நிலையமாகச் செயல்படும்; பெரும் அளவில் சேர்ந்துள்ளதும் தற்போது பயன்படாமலும் இருக்கும் உதவி ரூபாய்களை அது பயன்படுத்தும்; கல்வி, உடல் நலம், விவசாயம், விஞ்ஞானம், தொழில் ஆகிய துறைகளில் இந்திய — அமெரிக்க மக்களின் வளர்ச்சிக் குறிக்கோள்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கங்களுக்காக அது செலவிடப்படும்.

மதி நுட்பமும் தீர்க்க தரிசனமும் வாய்ந்த இந்த யோசனைக்கு இந்தியா, அமெரிக்கா இரு நாடுகளிலும் விரிவான ஆதரவும், சம்மதமும் கிடைக்கக்கூடும். விவரங்கள் வெளியிடப்படுவதை செனட் சபையும் நாடும் ஆவலோடும், யோசனை கைகூடுவதற்கு உதவும் மனப் பான்மையுடனும் எதிர்பார்க்கும் என நான் திடமாக நம்புகிறேன். இந்தக் கருத்தை வெளியிட்டதற்காக ஜனாதிபதியையும் அவரது அரசாங்கத்தையும் நான் பாராட்ட வேண்டும். மேலும், இந்தத் தருணத்தில் அதை வெளியிட்டது, இந்திய மக்களின் மதிப்புக்குரிய சிறந்த தலைவி முதல்முறை வந்திருக்கையில், அவருக்கு அளிக்கப்படும் பொருத்தமான பாராட்டுமாகும்.

" ஆரம்பக் கல்வி "
ஆபீஸ்.
94–95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

ஆசிரியர் பயிற்சி வீணுகாமல் தவிர்க்க வலியுறுத்தல்

பள்ளிக் கட்டிடங்கள் கட்ட சுயாதிகார ஸ்தாபன யோசனை

இந்தக் கருத்தரங்கு நேற்று முடிவுற்றது. இதன் 3 குழுக்கள் சமர்ப்பித்த அறிக்கைகளின் அடிப்படையில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

யூனியன் கல்வி இலாகா உதவி மந்திரி திருமதி சௌந்தரம் ராமச்சந்திரன் இதற்குத் தலைமை வகித்தார். செகண்டரி கல்வி டைரக்டர் டாக்டர் எம்.டி.பால் இக்கருத்தரங்கின் டைரக்டராகச் செயல் பட்டார்.

புதிய குழந்தைகளைக் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்ப்பதற்காக நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட தொகை போதாது என்று இக்கருத்தரங்கு கூறுகிறது. ஆரம்பக்கல்விக்காக ஒதுக்கப்படும் தொகைகளை பிற கல்வி இனங்களுக்கு மாற்றக் கூடாது என்றும் கோருகிறது.

பின் தங்கிய பிரிவினரிடையிலிருந்து அதிக குழந்தைகளை சேர்ப்பதற்காக வேண்டிய விசேஷ நடவடிக்கைகளை விவரிக்கையில், பள்ளிப்படிப்புக்கு பூர்வாங்கமாகப் பயிற்சி அளிக்க வசதி செய்து தருவது அவசியமாகுமென்று கருத்தரங்கு கூறுகிறது. நர்சரி, மாண்டிசேரி. கிண்டர் கார்டன் முறைகளுக்கு அதிக செலவாகுமாதலால், சில ராஜ்யங்களில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள "பால்வாடி", சென்னை ராஜ்யத்தில் உள்ள பூர்வாங்க கேந்திரங்கள் போன்ற ஸ்தாபனங்கள் இதற்கு ஏற்றதாகஇருக்குமென்றும், இதற்கு பொது நல ஸ்தாபனங்களையும், மகிளா மண்டலங்களையும் பூரணமாகப் பயன் படுத்திக் கொள்ளவேண்டுமென்று கூறுகிறது.

கட்டாய ஆரம்பக்கல்வி பற்றி இன்னும் சட்டமியற்றாத ராஜ்யங்கள் சட்டம் இயற்ற வேண்டும் என்பதும் கருத்தரங்கின் சிபாரிசுகளில் ஒன்றாகும்.

பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்த்து விட்ட பிறகு, அவை ஒழுங்காகப்பள்ளிகளுக்கு வராமலிருப்பது பற்றிக் குறிப்பிடுகையில் "சேர்க்கப்படும் குழந்தைகளின்" எண்ணிக்கைக்கும் "நடைமுறையில் ஆஜராகும்" குழந்தைகளின் எண்ணிக்கைக்குமிடையில் வித்தியாசம் கணிசமாகஇருப்பதாகக் கூறுகிறது. இதைக் குறைப்பதற்காக, கல்வி இலாகா டைரக்டர் காரியாலயத்தில் புள்ளி விவரப் பிரிவு

ஒன்றை அமைக்குமாறு யோசனை கூறுகிறது.

பூர்வ குடி மக்கள் வசிக்கும் பகுதிகளில், சாதாரணமாக பிற பகுதிகளில் கல்விக்காகச் செலவிட வகை செய்ய வேண்டுமென்பது மற்றொரு யோசனையாகும்.

ஆரம்ப ஆசிரியர் பயிற்சி

ஆசிரியர் பயிற்சிக்காகத் தற்போதுள்ள ஏற்பாடுகளை, தற்போது ஆரம்பக்கல்வித் திட்டத்திலுள்ள பலவீனமான அம்சமாகும் என்று கருத்தரங்கு அபிப்ராயப்படுகிறது. பயிற்சி பெறுகிறவர்கள் அனைவருமே பயிற்சியைப் பூர்த்தி செய்து "சேதாரம்" இல்லாதவகையில் பயிற்சி முறை அமையவேண்டும் என்று யோசனை கூறுகிறது.

குறைந்த பட்சம் 90 சதவிகிதம் பேராவது பயிற்சியைப் பூர்த்தி செய்யும்படி இருக்க வேண்டும்.

கூடுதலாக ஆசிரியர்கள் தேவைப்படும் நிலைமையில், புதிய பயிற்சிப் பள்ளிகளை ஆரம்பிப்பதற்குப் பதிலாக, ஏற்கனவே உள்ள "நல்ல" பள்ளிகளை விஸ்தரிக்க வேண்டும் என்பதும் ஒரு யோசனையாகும். பயிற்சியின் போது ஏற்படும் முழுச் செலவுக்கும் போதுமானதாக உபகாரச் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்றும், பயிற்சி பெறாத ஆசிரியர்களைப் பயிற்சிக்காலத்திலும் அவர்களுக்கு முழு ஊதியம் அளித்துவர வேண்டும் என்றும் கருத்தரங்கு சிபாரிசு செய்கிறது.

ஆசிரியர்களின் பயிற்சிக் காலம் இரண்டு வருஷமாக இருந்து வர வேண்டும் என்றும் கருத்தரங்கு வற்புறுத்துகிறது.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் பயிற்சி விஷயத்தில், சர்வகலா சாலைகள் நேரடியாக சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், இதற்காக "டிப்ளமா" படிப்பு இல்லாத சர்வகலாசாலைகளில் 'டிப்ளமா' ஏற்படுத்தவேண்டும் என்றும் கூறுகிறது.

ஆரம்பப் பள்ளி அபிவிருத்தி

ஆரம்பபள்ளி அபிவிருத்தி பற்றி, இக்கருத்தரங்கு ஒரு முக்கியமான சிபாரிசு செய்திருக்கிறது. பள்ளிக் கட்டிடங்கள் கட்டவும், அதற்காக இன்ஷ்யூரென்ஸ் கார்ப்பரேஷன் போன்ற ஸ்தாபனங்களிலிருந்து கடன் வசதி பெறவும், சுயாதிகாரத்துடன் கூடிய ஸ்தாபனத்தை ராஜ்ய சர்க்கார்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும், இத்தகைய கடன்களுக்கு, ராஜ்ய சர்க்கார்கள் உத்திரவாதமளிக்க வேண்டுமென்றும் கருத்தரங்கு சிபாரிசு செய்கிறது.

பாட புத்தகங்களைப் பொருத்தவரை ஒவ்வொரு ராஜ்ஜியத்திலும் சுயாதிகாரத்துடன் கூடிய ஒரு ஸ்தாபனத்தை அமைக்கவேண்டும். பாடப்புத்தகங்களை நிர்ணயிப்பதுடன்கூட, சொந்த அச்சகத்துடன் கூடியதாகவும் அந்த ஸ்தாபனம் இருக்க வேண்டும் என்கிறது.

[26-ம் பக்கம் பார்க்க]

கல்வித் துறைச் செய்திகள்

ஆசிரியர்களுக்கிடையில் சம்பள விகித ஏற்றத் தாழ்வு

நிவர்த்திக்குமாறு ராஜ்யங்களுக்குடில்லியோசனை

புதுடில்லி, மார்ச். 4—சர்க்கார் பள்ளி ஆசிரியர்களுக்கும் பிற அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளின் ஆசிரியர்களுக்குமிடையில் சம்பள விகிதத்திலுள்ள ஏற்றத்தாழ்வை கூடிய வரையில் நிவர்த்திக்குமாறு ராஜ்ய சர்க்கார்களுக்கு மத்திய சர்க்கார் யோசனை தெரிவித்திருப்பதாக கல்வி மந்திரி திரு. சாக்ளா இன்று ராஜ்ய சபையில் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

பள்ளிக் கட்டண வசூல் கூடாது என்பதே அரசினர் கொள்கை

இதில் வேற்றுமை பாராட்ட முடியாது ; அசெம்பிளியில் முதல் அமைச்சர் அறிவுறுத்தல்

சென்னை. பிப், 5—சென்னைக் கல்வி விதிகளின்படி அங்கீகாரம் செய்யப்பட்ட எந்த செகண்டரி பள்ளியிலும் மாணவர்களுக்குக் கட்டணம் விதிக்கக் கூடாது என்பதுதான் சர்க்காரின் கொள்கையென்றும், ஆகவே பணக்காரர்களின் வருமான வரி செலுத்துகிறவர்களின் குழந்தைகளுக்குக் கட்டணம் விதிக்க வேண்டும் என்னும் யோசனையை ஏற்றுக் கொள்ள இயலாது என்றும் இன்று அசெம்பிளியில் முதல் மந்திரி கேள்வி நேரத்தில் கூறினார். பள்ளிப் படிப்பு விஷயத்தில் இத்தகைய வேற்றுமைகளை உண்டு பண்ணத் தாம் விரும்பவில்லை என்றும் அவர் கூறினார்.

கட்டிட நிதிகளுக்கும், மற்றும் சில நிதிகளுக்கும் சில பள்ளியில் பணம் வசூலிக்கப்படுவதாகத் திரு. பாலகிருஷ்ணன் கூறினார்.

கட்டிட நிதிக்குப் பணம் வசூல் செய்வதற்குத் தடையில்லை என்றும், ஆனால் கட்டாயப்படுத்தி வசூல் செய்யக்கூடாது என்றும் முதல் மந்திரி கூறினார்.

பெண்கள் பள்ளிகளில் ஆண் ஆசிரியர்களை நியமனம் செய்யக் கூடாது என்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறதா என்று

[25-ம் பக்கம் தொடர்ச்சி]

யூனியன் உதவி மந்திரி திரு. மதி சௌந்தரம் ராமச்சந்திரன் நிகழ்த்திய முடிவுரையில், கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான முறைகள் தான் இந்த வருஷ கருத்தரங்கில் வற்புறுத்தப்பட்ட முக்கிய அம்சமாகும் என்றார். கடந்த பத்து வருஷ காலத்தில் ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்காக சர்க்கார் பல நடவடிக்கை எடுத்திருக்கிறது என்றார்.

திரு. கருணாநிதி கேட்டார். அப்படியொன்றும் உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்று முதல் மந்திரி கூறினார். ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியைகளை நியமிப்பது நல்லது என்று தான் அபிப்ராயப் படுவதாக முதன் மந்திரி கூறினார்.

திரு கல்யாணசுந்தரம் கேட்ட கேள்விக்குப்பின் வருமாறு பதில் கூறப்பட்டது: சென்னை மாநிலத்தில் 1163 ஜில்லா போர்டு உயர் நிலை ஆண் பள்ளிகளும் 79 ஜில்லா போர்டு உயர்நிலை பெண் பள்ளிகளும் இருக்கின்றன. நிர்வாகத்திற்காக அவை தனிப் பிரிவாக வைத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

பழைய ஜில்லா போர்டு உயர் நிலைப் பள்ளிகளின் நிர்வாகம் பற்றி விசேஷ ஜில்லா கல்வி அதிகாரிகளுக்கு யோசனை கூறும் பொருட்டு ஒவ்வொரு அபிவிருத்தி ஜில்லாவுக்கும் ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டிருப்பதாக முதல் மந்திரி கூறினார்.

பாலிடெக்னிக்குகளில் சேர புது வழி

கணிதம், விஞ்ஞானம் இரண்டும் சேர்த்து 100 மார்க் பெற்றிருக்க வேண்டும்

திருச்சி, ஏப். 3—ராஜ்யத்தில் பாலிடெக்னிக்குகளில் சேர விரும்பும் மாணவர்கள் எஸ். எஸ் எல். ஸி. பரீட்சையில் கணிதத்திலும், விஞ்ஞானத்திலும் சேர்ந்து மொத்தம் 100 மார்க்குகள் வாங்கியிருக்க வேண்டும் என்று சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

வருகிற கல்வி யாண்டிலிருந்து இந்த ஏற்பாடு அமுலுக்கு வரும்.

கணிதம், பொது விஞ்ஞானம் இரண்டிலும், குறைந்தபட்சம் 40 மார்க்கும், இரண்டிலும் சேர்ந்து 100 மார்க்கும் வாங்கியிருக்க வேண்டும்.

பிற்பட்ட வகுப்பினர், ஷெட்யூல்டு வகுப்பினர் விஷயத்தில் இந்த விதி இருக்காது எனத் தெரிகிறது.

ராஜ்யத்தில் தற்போது சுமார் 33 பாலிடெக்னிக்குகள் உள்ளன. இவற்றில் 3 பெண்களுக்காக உள்ளன.

தற்போதைய கல்வி முறையை மாற்றி அமைக்காவிடில்

அடுத்த 15 ஆண்டுகளில் படித்தவரிடை வேலையின்மை பெருகிவிடும்

திட்டக் கமிஷன் மெம்பர் திரு. ராவ் கருத்து

லட்சுமணபுரி. பிப்.19—உத்தியோகத்தை அதிக அளவு நோக்கமாகக் கொண்டுள்ளது நமது தற்போதையகல்வி முறை. இந்நோக்கத்தை மாற்றிக் கல்வி முறையை சீரமைக்காவிடில அடுத்த 10 அல்லது 15 ஆண்டுகளில் படித்தவர்களிடையே வேலையின்மை சமாளிக்க முடியாத அளவுக்குப் பிரம்மாண்டமானதாகி விடும் என்று திட்டக் கமிஷன் மெம்பர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் இன்று இங்குக் கூறினார்.

அதிக அளவு உற்பத்தித் திறன் நோக்குள்ளதாக விளங்கும் ரீதியில் தமது கல்வி முறையை மாற்றியமைத்தாக வேண்டும் என்றார். லட்சுமண புரி சர்வகலாசாலையில் "கல்வி ஒரு முதலீடு" என்பது பற்றிய கருத்தரங்கைத் திரு. ராவ் துவக்கி வைத்துப் பேசினார்.

உற்பத்தித் திறன் நோக்கு என்றால் உத்தியோகத்துக்கு வகை செய்வதோ அல்லது அதிக ஊதியம் பெற வகை செய்வதோ அல்ல. ஊதியத்துடன் கூடிய உத்தியோகத்தை நாடுவது கல்வியுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. தானாக முயற்சி செய்து சம்பாதிக்கும் மனப்பான்மைக்கு இது முரணாக உள்ளது. இதனால் சுய முயற்சியும், தன்னம்பிக்கையும் போதுமான அளவு இல்லாது போய்விடுகிறது. வருமானத்தை ஈட்டுவதற்கு உத்யோகம் பெறுவது ஒன்றேவழி என்ற எண்ணம் படித்தவர்களிடையே நிலவுகிறது. இதற்கான காரணங்களை ஆராய்ந்தறிவதும், பரிகாரம் காண்பதும் நிபுணர்களின் கடமை.

கல்வியின் பொருளாதார அம்சம் சம்பந்தப்பட்டவரை, அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதார அமைப்பில் கல்விக்காகச் செலவிடுவது நியாயமானதே. இதனை முதலீடாகக் கருத வேண்டும்.

மனித வளத்தை அபிவிருத்தியடையச் செய்வது வளர்ந்து வரும் பொருளாதார அமைப்பில் கல்வியின் முக்கிய நோக்கமாகும்.

படித்தவர்களிடையே வேலையின்மை இல்லாதவரை முதலீட்டுக்குத்தக்க பிரதிபலன் நிச்சயம் உண்டு. ஆனால், தற்போது படித்தவரிடை வேலையின்மை நிலவுகிறது. எனவே முதலீட்டுக்குத் தக்க பலன் கிடைக்கவில்லை. கடந்த 15 ஆண்டுகளாக பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டும் படித்தவரிடை வேலையின்மை அதிகரித்து வருகிறது. ஆகவே, வளர்ந்து வரும் பொருளாதார அமைப்பில் தேவைப்படும் திறமையாளர்களுக்கும் உயர்தர கல்விக்குமிடையே (முக்கியமாகப் பட்டப் படிப்புக்கு) நெருங்கிய சம்பந்தத்தை ஏற்படுத்துவது அவசியம் என்று திரு. வி. கே. ஆர். வி. ராவ் தொடர்ந்து குறிப்பிட்டார்.

ஆரம்பப் பள்ளி மாணவர் 18 லட்சம் பேருக்கு இலவசமாகப் பலகை, புத்தகம்

வேலூர் பள்ளி அபிவிருத்தி மாநாட்டில் செகண்டரி கல்வி டைரக்டர் தகவல்

வேலூர், மார்ச். 6—கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டி கல்வி இலாகா டைரக்டர் காரியாலயப் பிரிவைத் திறமையான வகையில் திருத்தி யமைக்க நடவடிக்கை எடுப்பது பற்றி சர்க்கார் தீவிரமாக யோசித்து வருவதாய் செகண்டரி கல்வித்துறை

டைரக்டர் திரு. டைட்டஸ் இன்று வேலூரில் தெரிவித்தார்.

வேலூரில் பள்ளி அபிவிருத்தி மாநாட்டுக்குத் தலைமை வகித்து அவர் பேசுனார்.

பள்ளி அபிவிருத்தி சம்பந்தப் பட்ட விஷயங்களில் முடிவு எடுக்க, ஜில்லா அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்குவது பற்றி சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

திரு. டைட்டஸ் மேலும் கூறியதாவது :-

செகண்டரிபள்ளிகளில் தற்போது 5.5 லட்சம் பேர் படித்து வருகின்றனர். இதை இரு மடங்காக்க சர்க்கார் உத்தேசித்து வருகிறது. இதற்கேற்ப ஆசிரியர்களின் எண்ணிக்கையும் உயர்த்தப்படும்.

4வது திட்டத்தின் போது 1200 செகண்டரி பள்ளிகளுக்கு விஞ்ஞானக் கருவி வசதிகள் செய்து தரப்படும். செகண்டரி பள்ளிப் படிப்பு வயதிலுள்ள சிறுவர்களில் குறைந்தபட்சம் 60 சதவிகிதம் பேர்களாவது 1971-ம் வருஷ முடிவுக்குள் செகண்டரி பள்ளிகளில் படித்து வர வேண்டும் என்பதில் சர்க்கார் ஆர்வம் கொண்டிருக்கிறது.

கிராமங்களில் ஆசிரியர்களுக்காக 3800 வீடுகள் கட்டித் தரப்படும்.

இன்னும் சில மாதங்களில் ஆரம்பப் பள்ளிகளிலுள்ள சுமார் 18 லட்சம் பேருக்கு இலவசமாகப் பலகைகளும் புத்தகங்களும் தரப்படும்.

மாநில சமூக நல போர்டு தலைவி திருமதி. சரோஜினி வரதப்பன் வைத்திய வண்டி வசதியைத் துவக்கி வைத்துப் பேசினார். ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒத்துழைத்தால், அற்புதமான சாதனைகளைக் காணலாம் என்றார். எல்லாப் பள்ளிகளிலும் பெற்றோர் - ஆசிரியர் சங்கங்கள் அமைக்க வேண்டும் என்றார். திருமதி வரதப்பன் இலவசச் சீருடை விநியோகத்தையும் துவக்கி வைத்தார். 12 பெற்றோர் - ஆசிரியர் சங்கங்களையும் துவக்கி வைத்தார்.

மொத்த பெண்களில் 20 சதவிகிதப் பேர் தான் செகண்டரி பள்ளிகளில் சேர்ந்திருப்பதாகவும், சிறுவர்களிலும் 76 சதவிகிதம் பேரே சேர்ந்திருப்பதாகவும் திரு டைட்டஸ் சொன்னார். 4வது திட்டத்தின் போது இந்த நிலைமையைத் திருத்தியாக வேண்டும் என்றார்.

நீர் என்பேன் நான்

[மா. கி. தசரதன், எம்.ஏ.]

பாடலில் இருவகை உண்டு; ஒன்று பொருளால் சிறப்படைவது; மற்றது சொல்லால் சிறப்படைவது. பொருள் அழகோடு சொல்லழகும் சேர்ந்து சிறக்கும் பாடல்களும் உள. சங்க காலத்துப் பாடல்களில் சொல்லழகை விடப் பொருளழகே மிகுந்து காணப்படும். உள்ளத்து உணர்ச்சிகளின் நிழல் அவர்களுடைய பாடல்கள். பிற்காலத்துப் பாடல்களோ பொருளைவிடச் சொல்லிலேயே மிகுந்த நாட்டம் கொண்டவையாகும். அந்த வகையான பிற்காலத்துப் பாடல்கள் பல, புலவர்களால் பாடப்பட்டுள்ளன. அவற்றைத்தான் தனிப்பாடல்கள் என்று குறிப்பிடுகின்றோம். அந்தப் புலவர்களின் பாடல்களில் பொருள் சிறப்பு இல்லாமல் இல்லை. எனினும் சொல்லில் தனிக்கவனம் கொண்டு பாடப் பட்டவை அவை. இவற்றில் சில துளிகளைக் கண்டுசுவைக்கலாம்.

தனிப்பாடல் என்றதும் கவி காளமேகம் நினைவுதான் எவருக்கும் எழும். தனிப்பாடல் தொகுதியில் மிகுதியான தொகையுள்ள பாடல்கள் இவரால் எழுதப் பெற்றவை. ஈயும் எறும்பும் இவருக்குப் பாடல் பொருளாகும். அவருடைய பாடல்களில் 'சரளம்'-தடையற்ற ஓட்டம் சிறப்புடையதாகும். நையாண்டியும் கேலியும் அவருக்குக் கைவந்த சரக்கு. மகளிர் இன்பம்பற்றிப் பாடுவது அவர்கட்கு இன்பம்! அவர் காலத்திலேயே ஒருவர் அவருடைய பாடல்களை **'வெள்ளைக் கவி'** (பொருளற்ற கவி) என்று பாடியுள்ளார். **'நின்னுடைய கள்ளக்கவிக் கடையைக் கட்டு'** என்றும் கூறினார். எனினும் காளமேகத்தின் கவிகள் பலவற்றில் இன்சுவை காணலாம்.

ஒன்றிரண்டு மூன்றுநான்
கைந்தாறு வேழெட்டு
ஒன்பது பத்துப்
பதினொன் றுபன்னி
ரண்டுபதின் மூன்றுபதி
நான்குபதி னைந்துபதி
னாறுபதி னேழ்பதி னெட்டு.

இது கவியா? என்று மலைக்கின்றீர்கள். ஒன்றிலிருந்து பதினெட்டு வரை எழுதினான். அது பாட்டாகி விட்டது. இப்போது நமக்கு இது எளிமையாகத் தோன்றுகிறது. ஆனால் இப்பாட்டைக் காணு முன்னம் இப்படி ஒரு பாட்டு எழுதவேண்டும் என்றால், சங்கடமாக இருந்திருக்கும்.

காக்கைக்கா காகூகை
கூகைக்கா காகாக்கை
கோக்குக்கூ காக்கைக்குக்
கொக்கொக்க-கைக்கைக்குக்
காக்கைக்குக் கைக்கைக்கா கா.

க' என்னும் எழுத்தும் அதன் இனமுமே இப்பாட்டில் உள்ளது. இதற்கும் பொருள் இருக்கிறது!

காக்கைக்கு ஆகா கூகை,
கூகைக்கு ஆகா காக்கை!
கோக்கு கூ காக்கைக்கு
கொக்கு ஒக்க
கைக்கைக்கு காக்கைக்கு
கைக்கு ஐக்கு ஆகா

இப்படிப் பிரித்துப் படிக்க வேண்டும். படித்தால் பொருள் வருகிறது:- காக்கைக்கு ஆகா கூகை—

காக்கைக்குப் பகை கோட்டான்; கூகைக்கு ஆகா காக்கை—

கோட்டானுக்குப் பகை காக்கை.

கோக்கு—அரசனுக்கு, கூ—பூமியை, காக்கைக்கு-காப்பாற்றுவதற்கு, கொக்கு ஒக்க—கொக்கைப் போல் சமயம் பார்க்க, கைக்கைக்கு — பகையெதிர்த்து, காக்கைக்கு— காப்பாற்றுவதற்கு கைக்குஐக்கு—திறமுடையதலைவனுக்கும், ஆகா—(கால வாய்ப் பின்றி) ஆகாது.

ஒன்று-பதினெட்டு என்றதும் பாட்டு. இதுவும் பாட்டுதான்! அதிலே பொருள் வெள்ளையாகிறது. இதிலே பொருள் உடனே புலப்படவில்லை. இதுபோல் இரு எல்லைக்கும் சென்றுவரும் இயல்புடையன காளமேகத்தின் பாடல்கள்.

திருமலைராயன் என்னும் பெயருடைய அரசனைச் சிறப்பித்துப் பாடவேண்டும் என்று எண்ணுகின்றார் கவிகாளமேகம். அவ்வரசனின் கையில் உள்ளவாள் நினைவுக்கு வருகிறது. அதனையே பாடல் பொருளாக எடுத்துக் கொள்ளுகின்றார். வாள் என்றால் அதுதான் வாள், மற்றதெல்லாம் அல்ல' என்கிறார். பாட்டையே பார்ப்போம்:

செற்றலரை வென்ற
திருமலைராயன் கரத்தில்
வெற்றிபுரியும் வாளே
வீரவாள்—மற்றைய வாள்
போவாள் வருவாள்
புகுவாள் புறப்படுவாள்
ஆவாள் இவள் அவள் ஆம்!

கேலி எந்த அளவுக்குப் போகிறது பாருங்கள்!

புகழ்வதில் எப்படியோ, அப்படியே தான் இகழ்வதிலேயும். என்றோ ஒரு நாள் யாரோ ஒரு ஆயர்குல மகள் இவருக்குச் சற்று அதிகமாக நீர் கலந்து மோர் ஊற்றினாள் போலும். அதைக் காணும் காளமேகம் கவி பாடுகின்றான்:—

கார் என்று பேர்படைத்தாய்
ககனத்து உறும்போது
நீர் என்று பேர்படைத்தாய்
நெடுந்தரையில் வந்ததற் பின்
வாரொன்று மென்கூந்தல்
ஆச்சியர்கை வந்ததற் பின்

மோர் என்று பேர் படைத்தாய்;
முப்பேரும் பெற்றாயே!

வானத்திலே கார் (மேகம்), தரையில் நீர், ஆயர்குல மகள் கையில் மோர்—என்று மூன்று பெயரையும் பெற்றுவிட்டதாம் அது! இதைவிட நயமாகவும் அழுத்தமாகவும் நீராகி விட்ட மோரை எப்படிக் கேலி செய்ய இயலும் ?

சொற்களிலே சிலம்பம் ஆடுவதில் காளமேகம் தனிச்சுவை காண்பவன் ஆவான். படிக்கின்றவர்களுக்கு உடனே பொருள் விளங்காத வகையில் சில பாடல்கள் அமைவது உண்டு

கரிக்காய் பொரித்தாள்
கன்னிக்காயைத் தீய்த்தாள்
பரிக்காயைப் பச்சடியாப்
பண்ணுள்—உருக்கமுள்ள
அப்பைக்காய் நெய் துவட்டல்
ஆக்கினுள் அத்தை மகள்,
உப்புக் காண் சிச்சி உமி!

எவ்வளவோ விருந்து சாப்பிட்டிருக்கிறோம், ஆனல் இப்படி ஒரு சமையல் வகையைக் கேட்டதும் இல்லை அல்லவா?

கரிக்காய்—அது பொரியல்
கன்னிக்காய்—தீய்க்கப்பட்ட
தாம்!
பரிக்காயாம், அதிலே பச்சடி
யாம்
அப்பைக்காயாம், அது உருக்க
முள்ளதாம்.
அதை நெய்யிலே துவட்டி
எடுத்தார்களாம்.

சமையல் முறைகள் நேர்த்தியாகத்தான் உள்ளன. ஆனல் சமையலுக்குப் பயன்பட்ட காய் வகைகள்தான் புதிராக இருக்கின்றன. புரிவது சிரமாக இருக்கிறது.

கரிக்காய்; (கரி—யானை—அத்தி) அத்திக்காய்.

கன்னிக்காய்—வாழைக்காய்
பரி—மா,
பரிக்காய்—மாங்காய்,
அப்பைக்காய்,
அ—அழகிய
பை—கத்தரி

அப்பைக்காய்-அழகிய கத்தரிக்காய்.

இப்போது புரிகிறதா சமையல் என்ன என்பது?

அத்திக்காய் பொரியல், வாழைக்காய் வறுவல், மாங்காய்ப் பச்சடி, கத்திரிக்காய் நெய்துவட்டல்—வாயிலே நீர், ஊறு.—இதோடு விடவில்லை புலவன். இவ்வளவையும் செய்தது யார் தெரியுமா? அத்தை மகள்! ஆனல் பெயரைச் சொல்லவில்லை—அது ரத்தினமோ, கோமேதகமோ—பெயரைப்பற்றி என்ன, செய்தவளுடைய உறவு சொல்லிவிட்டாலே, அது போதாதா? அத்தை மகள் செய்தாள் என்றாலும், அத்தனையிலேயும் உப்பு ஒரு கல் கூடுதலாக இருக்கிறது-சிச்சி உமி—என்று துப்பிவிடுகின்றான்! இது அத்தை மகளுடைய சமையலுக்கு. மற்றவர்கள் சமையலுக்கு......?

ஒரு சொல்லுக்கு உள்ள இரு பொருள்களைக் கையாண்டு இரண்டு பொருள் வரம்படி பாடல் இயற்றுவதைச் சிலேடை என்பர். சிலேடை பாடுவதும் காளமேகத்திற்குச் சுவையுடைய பணி தான்! எத்தனையோ, இரண்டு பொருள்களை இணைத்துப்பாடிய சிலேடைப்பாடல்கள், காளமேகம் பாடியவை காணக் கிடக்கின்றன. ஆமணக்குக்கும் யானைக்கும், வைக்கோலுக்கும் யானைக்கும், பாம்புக்கும் வாழைப் பழத்துக்கும், பாம்புக்கும் எலு மிச்சைப் பழத்துக்கும், மீனுக் கும் பேனுக்குமாக இணைத்துப் பாடிய பாடல்கள் உள்ளன.

ஓடும் இருக்கும் அதன்
உள்வாய் வெளுத்திருக்கும்
நாடுங் குலைதனக்கு
நாணாது—சேடியே
தீங்கான திலைத்

திருமலைரா யன்வரையில்
தேங்காயும் நாயும் எனச் சப்பு. தேங்காயும் நாயும் ஒரே தன்மை யுடையனபோல் இப்பாட்டு கூறு கிறது. அப்படியா சங்கதி? பொருளைப் பாருங்களேன்,

தோழிய திருமலைராயன் மலையில்—

தேங்காயானது, ஓடும் இருக் கும்—மேலே ஓட்டால் மூடப் பட்டிருக்கும்; உள்வாய் வெளுத் திருக்கும்-காயின் உள்ளே பருப்பு வெளுத்திருக்கும்; நாடும் குலைதனக்கு நாணாது—எல்லா ராலும் விரும்பப்படும் தேங் காய்க் குலையில் கோணாது இருக் கும்.

நாயானது; ஓடும்—விரைந்து செல்லும், இருக்கும்—ஓடி இளைத்து ஓர் இடத்தில் அமர்ந்து இருக்கும்; அதன் உள்வாய் வெளுத்திருக்கும்—வாயின் உட் பக்கம் வெளுத்துக் காணப்படும்; நாடும்—இறையை நாடும்; குலை தனக்கு நாணாது-குரைப்பதற்கு வெட்கப்படாது.

இப்போது பாருங்கள் ஒரே சொல் இரண்டின் தன்மையை யும் விளக்குகிறது.

சந்திரனும் மலையும் ஒன்றுகும் என்றும் காளமேகம் எடுத் துரைக்கின்றான். எப்படித் தெரியுமா?

மலையானது நிலவாய் விளங்கு தலால்-நிலத்தில் தோன்றி உயர்வாய் விளங்குதலாலும், நீள் வான் படிந்து—பெரிய மேகமண் டிலம் வரை படிந்து, சிலபோது சிலபூக்கள் (குறிஞ்சி முதலியன) உலாவுதலால் - காணப் படுவதா லும், தலைமேல் உதித்து வரலால் தரையின் மீது தோன்றி அழ காய் விளங்குவதாலும் :—

சந்திரனானது, நிலவொளி கொடுப்பதினாலும், நீண்ட ஆகா யத்தில் பொருந்தி சில காலங் களில் உலாவுதலாலும் நிலத்தின் ஓரத்தில் தோன்றித் தலைக்கு மேல் வருதலாலும்,

இரண்டும் ஒன்றும்!
நிலவாய் விளங்குதலால்
நீள்வான் படிந்து
சிலபோ துலவுதலால்
சென்று— தலைமேல்

உதித்து வரலால்
  உயர்மா மலையை
மதிக்கு நிகராக வழுத்து.

இதுபோல் கவர் பொருளில் கவிதை எழுதுவது படிப்போருக்கு இடையூறுதான். எளிமை மட்டுமே குறிக்கோளாக இருப்பின், அது எல்லாருக்கும் எப்படி இன்பம் பயக்கும்? யாராவது சிலராவது திகைக்க வேண்டும் என்று கருதும் காளமேகம் இதுபோன்ற பாடல்களை இயற்றினார் போலும்!

இடைக்காலத்தில் இத்தகைய முறையில் பாடல் எழுதும் பழக்கம் நிரம்ப இருந்திருக்கிறது. அதிலேதான் காளமேகமும் அந்நெறியிலேயே சென்றிருக்கின்றான்.

செருப்புக்கு வீரரைச்
  சென்றுழக்கும் வேலனை
பொருப்புக்கு நாயகனைப்
  புல்ல—மருப்புக்குத்
தண்டேன் பொழிந்ததிருத்
  தாமரைமேல் வீற்றிருக்கும்
வண்டே விளக்குமாறே

போர்க்களத்தில் புகுந்துபோர் வீரர்களிடம் போய்த் துன்புறுத்தும் வேலாயுதம் உடையவனை மலைத் தலைவனைத் தழுவுவதற்கு, வழியை வண்டே காட்டும்—இது பாடல் பொருள். பொருளைவிட, பொருளைப்புலப்படுத்தப் புலவன் கையாண்ட சொற்களே இங்குச் சிறப்பிடம் பெறுகின்றன.

செருப்பு என்று பாடல் தொடங்கப்பட்டது, விளக்குமாறு என்று முடிக்கப்பட்டது—அதுவே இங்குள்ள சிறப்பாகும். செரு என்றால் போர்க்களம்—செருபுக்கு என்பது போர்க்களம் புகுந்து என்று பொருள் தரும். செருப்புக்கு என்பதில் செருப்பு என்று வேறு பொருள் தரும் விபரீதம் செய்திடுகின்றது. விளக்கும் ஆறு—(வழி) என்று விளக்குமாறு என்றுவேறொன்றைஉணர்த்துகின்றது.

காளமேகம் கண்ட காட்சிகளில் ஒன்றை நாமும் காண்போம். நம்முடைய காலத்திலும் அப்படிப்பட்ட காட்சிகளை அடிக்கடி காண்கின்றோம். சில மோட்டார்களைத் தள்ளிக் கிளப்ப வேண்டியுள்ளது! குதிரையிலும் சில அப்படி இருக்கின்றன அல்லவா? பின்னிருந்து பிடித்துத் தள்ளுவதோடு மட்டும் நில்லாது முன்னிருந்து பற்றி இழுக்க வேண்டியதாகவும் அவை இருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு குதிரையைப் பூட்டிய வண்டியைக் கவிகாளமேகம், நமக்குக் காட்டுகின்றான், பாருங்கள் :

முன்னே கடிவாளம்
  மூன்று பேர் தொட்டிழுக்கப்
பின்னே யிருந்திரண்டு
  பேர் தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான்
  விகடராமன் குதிரை
மாதம்போம் காத வழி!

வேகமாக ஓடுகின்ற குதிரையைக் காளமேகம் காணவே இல்லையோ என்று ஐயுறல் வேண்டா. விரைந்து ஓடும், காற்றினும் கடுகி ஓடும் குதிரையையும் காளமேகம் கண்டிருக்கின்றான்.

ஆறும் பதினாறும்
ஆம் ஊரில் வேங்கட்டன்
ஏறும் பரிமாவே
யேற்றமா—வேறுமா
மெவந்தமா சும்மா
வெறுமா களிகிளற
வந்தமா சந்த மா மா!

எப்படி கேளீ! ஆறு (வழி) தெரியும் பதினாறு பேறுடைய ஆமூரில் உள்ள வேங்கட்டன் என்பவர் ஏறும்மாவே (குதிரையே) மா ஆகும்! சந்தமாமாவே (சந்திரனே) மற்றதெல்லாம், மெவந்தமா, சும்மா வெறுமா, களிகிளற வந்த மா!

நல்லதையும் கண்டான், அல்லதையும் கண்டான், கண்டதை நம் கண் முன் கொண்டுவந்து நிறுத்துகின்றான்!

காளமேகம் சொல்லே ஆளுவதிலே வல்லவன் என்று காணுகின்றோம். இடக்கு பேசுவதிலும் தான் வல்லவன் என்பதை ஒரு பாடலில் கூறுகின்றான்.

செய்யுள் எழுதும்போது புலவர்கள் சில சில இடங்களில் சொற்களை நீட்டியும் குறுக்கியும் எழுத உரிமை படைத்தவர்கள் ஆவார்கள் தாமரை என்பது மரை என்று வரும், அடு என்பது ஆடு என்றாகும். அவ்வாறு எழுதுவது செய்யுள் வழக்குப் பற்றி ஏற்றுக் கொள்ளப்படுவது உண்டு. கம்பனுடைய பாடல்களில் அப்படிப் பல (விகாரங்களை) மாறுபாடுளைக் காணுகின்றோம். அதைப் பற்றி வேறு எந்தப் புலவனும் ஏதும் கூறு கிறுக்ககாளமேகம் கூறுவதைக் கேளுங்கள் :—

நாராயணனை நராயணன்
என்றே கம்பன்
ஓராமல் சொன்ன
உறுதியால்—நேராக
வார் என்றால் வர் என்பேன்,
வாள் என்றால் வள் என்பேன்
நார் என்றால்
நர் என்பேன் நான்!

கம்பன், கொம்பனோ? என்று கேட்கும் வீரத்தினைக் காளமேகப் புலவனிடம் காணுகின்றோம்.

புலமை பொழுது போக்கிற்குப் பெருமளவு பயன்பட்டது. பிற்காலத்தில், அக்காலத்துப் பாடல்களில் பொருளினும் சொல்சுவை நிரம்பி நிற்கின்றது என்பதற்குக்காளமேகம் சான்று.

—"காஞ்சி"

சினம் பொல்லாதது———
"நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற."

—தெய்வப் புலவர்

அரும்பணி ஆற்றும் ஓர் அற்புதக் கல்லூரி

— டாக்டர் பிலிட்ஸ் பிராட்லி —

அமெரிக்காவில் கெண்டகி மாநிலத்தில் உள்ளது பெரியா கல்லூரி; 1855-ல் நிறுவப்பெற்றது. அன்று முதல், அம்மாநிலத்துக் கிழ்ப்பகுதியிலே மலைப் பிரதேசங்களில் எட்டாத் தொலைவில் வாழும் இளைஞர்கள் மேல் படிப்புப் படிக்க வாய்ப்பு அளித்து வரும் கல்லூரி இது.

இக்கல்லூரியில் 1,400 மாணவர்கள் படிக்கின்றனர். பத்துக்கு ஒன்பது பேர் மேற்சொன்ன குறிப்பிட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். இந்திய மாணவர்களும் சிலர் இங்கு உண்டு.

அமெரிக்க மாணவர் நாட்டிலே மிகக் குறைவான வருவாய் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

மாணவர்கள் தம் படிப்புக்கு ஆகும் செலவைப் பெரும்பாலும் தாங்களே பார்த்துக் கொள்கின்றனர். கல்லூரியின் உழைப்புத் திட்டம் இதற்கு வாய்ப்பு அளிக்கிறது.

பணிகைக் கடை, சலவை நிலையம், புத்தகக் கடை, பால்பண்ணை உணவு விடுதி, துடைப்பத் தொழிற்சாலை (ஆண்டுக்கு இரண்டு லட்சம் துடைப்பங்கள் இங்கு தயாராகின்றன), தச்சுப் பட்டறை, நெசவுக்கூடம் முதலியன மாணவர்கள் பொருளீட்ட வகை செய்யும் கல்லூரியின் உழைப்புத் துறைகள் ஆகும்.

உதவி ஆசிரியர்களாகவும், கல்லூரி குமாஸ்தாக்களாகவும், டைப்பிஸ்டுகளாகவும், கல்லூரி நூலகங்கள், அலுவலகங்கள், கட்டிடங்களில் காவலாளிகளாகவும் மாணவர்கள் பணியாற்றுகிறார்கள். கல்லூரி ஆஸ்பத்திரியிலும் நகரத் தீயணைப்பு நிலையத்திலும் கூட அவர்கள் வேலை செய்கிறார்கள்.

கல்லூரியில் 64 தனித்தனி இலாகாக்கள் அல்லது நிலையங்கள் இருக்கின்றன. இவற்றில் மாணவர்கள் நான்கு ஆண்டுகள் முழுவதும் பணியாற்றலாம்.

பெரியா கல்லூரியின் வரலாற்றிலே ஒரு அம்சம் இந்தியாவுக்கு மிகவும்பொருள்படைத்ததாகும். சமுதாய வளர்ச்சித்திட்டத்திலே கல்லூரி ஒப்பற்ற ஒரு முன்னோடியாக விளங்குகிறது.

மலைப் பிரதேச மக்களுக்காகப் பல வேறு திட்டங்களை ஆரம்ப காலத்திலேயே கல்லூரி தொடங்கியது.

1875-ல் கல்லூரி தொடங்கிய திட்டம் ஒன்று, மலைப் பிரதேசங்களில் பயணம் செய்து ஆங்காங்கு ஆசிரியர் கழகங்கள் நிறுவும் பொருட்டு, குறிப்பிட்ட காலத்துக்குக் கல்லூரி ஆசிரியர்களை அனுப்பி வைக்க முடிவு செய்யப் பெற்ற திட்டமிது. அரை நூற்

ஆண்டுக்கு மேலாக இத் திட்டம் நடந்தது.

எட்டாத் தொலைவுக்கும் மூலை முடுக்குகளுக்கும் பள்ளத்தாக்குகளுக்கும் ஆசிரியர்கள் தம் மூட்டை முடிச்சுகளுடன், குதிரைகளிலும் கோவேறு கழுதைகளிலும் பயணம் செய்து பணியாற்றினர். கூடவே அவர்கள் சமையல் செய்யும் பாத்திரங்களையும் தங்குவதற்குக் கூடாரங்களையும் எடுத்துச் செல்வர்.

சில சமயங்களில் இந்த ஆசிரியர்கள் பல மாதங்கள் வெளியே சென்றிருப்பதும் உண்டு. மலைப் பிரதேசங்களில் பல்வேறு இடங்களில் இவர்கள் ஐந்து நாள் நிகழ்ச்சித் திட்டத்தை நிறைவேற்றி வந்தனர். மக்கள் மைல் கணக்கில் பயணம் செய்து இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வந்தனர்.

குளிர் மாதங்களில் "வாய்ப்புப் பள்ளி" என்ற ஒன்றை முதியவர்களுக்காக, பெரியா கல்லூரி தன் இருப்பிடத்திலேயே நடத்தியது. விவசாயிகள் தம் குடும்பங்களுடன் இதில் பங்கெடுத்துக் கொண்டனர்.

1897-ல் பல்கலைக்கழகப் பலன் நீடிப்பு இலாகா ஒன்று ஆசிரியர் பயிற்சிக்காகவும், முதியோர் கல்விக்காகவும், மேலும் பல திட்டங்களைத் துவக்கியது.

1902-ல் வேளாண்மைப் பலன் நீடிப்பு நிலையம் தோன்றியது. கெண்டக்கி மாநிலத்திலேயே இதுதான் இத்தகைய முதலாவது நிலையம்.

1922-ல் கவுண்டி (வட்டம்) சாதனைப் போட்டியொன்று நடத்தப்பெற்றது. நாட்டில் சீர்திருத்தங்களை நிறைவேற்றி வைக்க சமுதாய ஒத்துழைப்பை ஊக்கி விடுவதுதான் இதன் இலட்சியம்.

1914-ல் நூலகப் பலன் நீடிப்புத் திட்டமொன்றைக் கல்லூரி துவக்கியது. மலைப் பகுதியில் மிகத் தொலைவில் உள்ள கிராமங்களுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் பெரிதும் பயன்பட்டது இது.

முதன் முதலில் புத்தகங்களைக் கோவேறு கழுதை பூட்டிய, சக்கர மற்ற இழுவை வண்டிகளில் கொண்டு போய் விநியோகித்தார்கள். சாலைகள் ஏற்பட்டதும், ஊர் சுற்றும் புத்தக மோட்டார் வண்டி பயன் படுத்தப்பட்டது.

இப்பொழுது இந்த நிலையங்களின் சில பணிகளை அரசாங்கமே நடத்துகிறது.

கெண்டக்கி மாநிலத்துக்கு மட்டுமன்றி நாடு முழுவதுக்குமே இன்று நிறைவேற்றப்பட்டு வரும் செம்மையான பொதுக் கல்வி சமுதாய நலத்திட்டங்கள் பலவற்றின் ஆற்றலை முன் கூட்டியே எடுத்து இயம்பியது பெரியா கல்லூரித் திட்டம். எனவே இக்கல்லூரியின் செல்வாக்கு அதன் கட்டிடங்களுக்குள்ளேயே நின்றுவிடவில்லை. நாடு முழுவதிலும் காணப்படுகிறது.

சுதந்திரச் சமுதாயத்திலே திறமை என்பது ஒரு சாரா

ருக்கோ ஒரு இனத்தவருக்கோ மட்டும் உரியதல்ல என்பதை பெரியா கல்லூரி காட்டி விட்டது. அமெரிக்க சமுதாயத்தின் பலப் பல பிரிவினர்களிடமிருந்து அது தலைவர்களைத் தோற்றுவித்துள்ளது.

பண்பாட்டு மரபு ஏதுமே இல்லாத மாணவர்கள் கூட பெரியா கல்லூரியில் சேர்ந்து படித்தது உண்டு.

இந்தப் பிரதேசத்தில் கல்வி வசதி பிற பிரதேசங்களைவிட மிகக் குறைவாக இருந்தது. இளைஞர்களுக்கு வேண்டிய நூல்களை வாங்கிக் கொடுக்கவோ, கலைப் பயிற்சி அளிக்கவோ, பொழுது போக்கு வசதிகள் செய்து கொடுக்கவோ குடும்பங்களுக்கு அன்று வகை இல்லை.

தடங்கல்களை நீக்கவும் உதவி செய்யவும் குறைபாடுகளை விரைவில் ஒழிக்கவும் கல்லூரி சில வசதிகளையும் திட்டங்களையும் வழங்கியது.

பிற அமெரிக்கக் கல்லூரிகளைப் போலவே, பெரியா கல்லூரியும் எல்லா வகையிலும் செயல்படுவதை இன்று யாரும் காணலாம்.

தனித்து விடப்பெற்ற மலைப் பகுதி இளைஞர்கள் அமெரிக்க வாழ்க்கையோடு ஒன்றிப் போக வகை செய்தது பெரியா கல்லூரி. இது ஒப்பற்றதொரு சாதனையாகும்.

கல்லூரி வாழ்க்கையில் மாணவர் ஆட்சிக் குழு ஒன்று உள்ளது.

மாணவர் சங்கம், கல்லூரியிலும் மாணவர் விடுதியிலும் மாணவர்கள் ஒழுங்காக நடப்பதற்குப் பெரும்பாலும் தானே பொறுப்பேற்றுள்ளது.

இக்கல்லூரியின் மாணவர்கள், பல கல்லூரிகள் போட்டியிடும் விளையாட்டுப் பந்தயங்களில் கலந்து கொள்கிறார்கள்.

கல்லூரியின் நாடகச் சங்கம் வாரா வாரம் நாடகம் நடத்துகிறது. "டைரக்ஷன்" முதல் நடிப்பு வரை மாணவர்களே நடத்துகின்றனர்.

மாணவர்கள், கல்லூரி வாரப் பத்திரிகையொன்றை வெளியிடுகின்றனர்.

பலவேறு பண்பாட்டு நடவடிக்கைகளுக்கும் இடம் அளிக்கிறது கல்லூரி. வேற்று மொழிகள் கற்பவர் சங்கங்கள் பொது விவகார மன்றங்கள் ஆகியவை எடுத்துக்காட்டுகள்.

பெரியாவின் கல்வித் திட்டமும் சிறப்புடையதாகும். பண்பியல் கலைகளிலும் சரி, விஞ்ஞா

னங்களிலும் சரி அதன் பட்டங்கள் உயர் தரமானவை.

பலப்பல துறைகளில் அது சிறப்பான வாய்ப்புக்களுக்கு வகை செய்கிறது. இங்கு ஓவியம், இசை இவை பற்றிய படிப்பும் பயிற்சியும் தனிச் சிறப்பானவை. வேளாண்மை, தொழில் நிர்வாகம், மனை இயல், தொழிற்கலைகள், நர்ஸ் தொழில் ஆகியவற்றில் பி. ஏ. என்பதற்கு இணையான விஞ்ஞான முதற் பட்டங்கள் வழங்கப்படுகின்றன.

விஞ்ஞான ஆய்வுக்கூடங்களில் சிறந்த கருவிகள் தேவையான அளவுக்கு இருக்கின்றன. நூலகத்தில் ஒன்றரை லட்சம் நூல்கள் இருக்கின்றன; நன்கு பயன் படுகின்றன; மேலும் பெருகுகின்றன.

பட்டம் பெற்ற பிறகு ஆராய்ச்சிப் படிப்புக்குச் செல்லும் பெரியா கல்லூரி மாணவர்களின் தொகையும் அதிகமாகும். அது வழங்கும் கல்வியின் உயர் தரத்திற்கு இதுவும் ஒரு சான்று.

ஆராய்ச்சிப் படிப்புக்கு அதிக பட்ச மாணவர்களை அனுப்பும் அமெரிக்கக் கல்லூரிகளில் ஒன்று பெரியா.

கெண்டக்கி மாநிலத்தில் மட்டுமல்ல. அமெரிக்கா நெடுகிலும் பெரியா கல்லூரி பட்டதாரிகள் தொழில் தலைவர்களாக விளங்குவதையும் கல்வித் துறையிலும் அரசாங்கப் பணியிலும் சிறந்து விளங்குவதையும் காணலாம்.

பெரியா கல்லூரிப் பேராசிரியர்களில் பலர் வெளி நாடுகளில் டாக்டர்களாகவும் ஆசிரியர்களாகவும் பணியாற்றி யுள்ளனர்.

சாதாரண மக்களின் அறிவையும் அசாதாரண இலட்சியங்களை அடையும்படி வளர்க்க முடியும் என்பதை இக் கல்லூரி எடுத்துக் காட்டுகிறது. எனவே ஜனநாயக சமுதாயத்தின் நம்பிக்கைக்கு ஒரு முன்னோடியாகவும் சின்னமாகவும் இக்கல்லூரி திகழ்கிறது.

"உலக நாடுகள் அனைத்திலுமுள்ள மக்களிடமும் ஒரே இரத்தம்தான் ஓடுகிறது. இறைவனின் படைப்பு இதுவே" என்பது இக்கல்லூரி முத்திரையில் பொறிக்கப்பட்டுள்ள வாக்கு. கல்லூரியைத் தோற்றுவித்தவர்களின் இந்த நம்பிக்கை இத்தனை ஆண்டுகளாகவும் இதன் வரலாற்றிலே பளிச்சென இலங்கி வருகிறது.

" அகழ்வரைத் தாங்கும் நிலம்போல் ; தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை "

—திருக்குறள்

பள்ளிகளில் நெருக்கடி

பள்ளிக்கூடங்களில் கீழ் வகுப்புகளில் குழந்தைகளுக்கு இடம் பிடிப்பது இவ்வருஷம் பெரும் பிரச்னையாகி விட்டது. உடனடியாக முதல், ஆறாவது, ஒன்பதாவது வகுப்புகளில் மாணவ, மாணவிகளை, அவர்கள் வசிக்கும் பகுதிகளிலுள்ள பள்ளிக்கூடங்களில் இடம் இல்லை என்று சொல்லாமல் சேர்த்துக் கொள்வதற்கு தாமதமின்றி பொதுப்படையான அனுமதியை அளித்தாக வேண்டும். ஷிப்டு முறையை ஏற்படுத்துவது பல இடங்களில் தவிர்க்க முடியாதது. இதை அனுமதித்துத் தானாகவேண்டும். மாணவ-ஆசிரிய விகிதம், வகுப்புப் பிரிவின் எண்ணிக்கையையும் மான்யத்தையும் பிணைக்கும் ஏற்பாடு முதலியவற்றின் அமுலை இவ்வாண்டு தளர்த்தி, தலைமையாசிரியர்களும், நிர்வாகத்தினரும் உசிதப்படி அதிக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு ஊக்கமளிக்க வேண்டும். தாமதமின்றிக் கவனம் செலுத்தியாக வேண்டும்.

ஷிடடு முறை உடனடியாக ஏற்பட்டாக வேண்டிய அவசியத்தை திருச்சிச் செய்தியொன்று சந்தேகத்துக்குச் சிறிதும் இடமில்லாதபடி தெளிவு படுத்துகிறது. திருச்சி ஜில்லாவில் ஒரு கிராமப் பள்ளிக்கூடத்தில் சேர 200 குழந்தைகள் சார்பில் மனுக்கள் வந்தன. பெற்றோர் தலைமையாசிரியரைச் சூழ்ந்து கொண்டனர். இருப்பவை நாற்பது இடங்கள் தாம். எனவே திருவுளச் சீட்டுப் போட்டு, அதிருஷ்டமுள்ள நாற்பது குழந்தைகளை எடுத்துக் கொள்வதாக தலைமையாசிரியர் கூறினார். வேறுவழியின்றி பெற்றோர் ஒப்புக்கொண்டனர். 160 பேர் வருத்தத்துடன் வீடு திரும்பினர். அவர்கள் என்ன செய்வார்கள்? பக்கத்துக் கிராமங்களிலுள்ள பள்ளிகளிலும் இதே போல நெருக்கடி இருக்கத்தான் செய்யும். எனவே, ஒரு வருஷம் வீணாகாமலிருக்கவேண்டுமாயின் அதிகப் பிரிவுகளை அனுமதித்தும், ஷிப்டு முறையை ஏற்படுத்தியும் தேவைக்கேற்ப எல்லாப் பள்ளிகளும் விரிவு காண்பதற்குத் தாமதமின்றி வழிசெய்து தானாக வேண்டும். ஆசிரியப் பிரச்னை இருக்கத்தான் செய்யும். ஓய்வெடுத்துக் கொண்டுள்ள ஆசிரியர்களைத் தற்காலிகமாக மீண்டும் சேவைக்கு அழைத்து, புதிய இளம் ஆசிரியர்கள் கிடைக்கும் வரை, பணியாற்றச் செய்யலாம். இதற்கான ரிஜிஸ்டரை ஒவ்வொரு ஜில்லாவிலும்

உடனே தயாரிக்க வேண்டும். தனியார் துறைப் பள்ளிகளும் விட்டு முறையைப் பின்பற்றுவதற்கு ஊக்கமளிப்பது அவசியம். அப்பொழுதுதான் நகர்ப்புறங்களில் இடநெருக்கடியை ஒருவாறு இவ்வாண்டு சமாளிக்கலாம்.

பல மாதங்களுக்கு முன்னமே இவ்வாண்டின் இடத் தேவைகளைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து, ஆங்காங்கு தேவையை மதிப்பிட்டு, வகுப்புப் பிரிவுகளை அதிகப்படுத்தவும், புதுப் பள்ளிகளைத் தோற்றுவிக்கவும் வழி செய்திருக்க முடியும். பெரும்பாலான மேலை நாடுகளில் இத்தகைய மதிப்பீடுகளை ஆண்டுதோறும் நடத்தி, தேவைப்படும் ஆசிரியப் பயிற்சிக்கும், இட வசதிக்கும், முன்கூட்டியே ஏற்பாடு செய்கிறார்கள். அம்மாதிரி இங்கேயும் சில ஒழுங்கு முறைகளைச் செய்தாக வேண்டிய அவசியமுண்டு.

இப்பிரச்னையில் ஒழுங்கான கவனம் செலுத்தி எவ்வித சிரமமுமின்றி, தேவைக்கேற்ப, வசதிகள் விரிவு காணச் செய்வது முக்கியமான பொறுப்பு. சம்பளம் வசூலிக்கலாகாது என்ற தடையுத்தரவு வந்த பிறகு தனியார் நிர்வாகத்திலுள்ள பள்ளிகளை விரிவாக்குவதில் அக்கறை குறைந்துவிட்டது. புதிதாக தனியார்த் துறைப் பள்ளிகள் ஏற்படுவதையும் இது அசாத்தியமாகிவிட்டது. பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துகள் நடத்தும் பள்ளிகள் விஷயத்திலும் அரசாங்கமே நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டியிருக்கும். ஏற்கெனவே நடந்து வந்த ஜில்லா போர்டு ஹைஸ்கூல்கள் அரசாங்கப் பொறுப்பாகி விட்டன. முனிசிபல் ஹைஸ்கூல்களையும் அரசாங்கமே எடுத்துக் கொண்டாக வேண்டிய நிர்ப்பந்த நிலைமை ஏற்பட்டு வருகிறது. எனவே எல்லாப் பிரச்னைகளையும் இணக்கமாகக் கவனிக்க வேண்டும்.

[42-ம் பக்கத் தொடர்ச்சி]

மின்றி, அவர்களுக்கு நல்லுணர்ச்சி, அதாவது தார்மீக பொறுப்புணர்ச்சி உள்ளதா என்பதையும் கவனிக்க வேண்டும். இவர்களுடைய சொந்த அந்தஸ்து அல்லது ஜாதி அல்லது வகுப்பு முதலியவற்றைக் கவனித்துதேர்ந்தெடுத்தால் நீங்கள் முற்றிலும் சங்கடத்தில் சிக்கிக் கொள்வீர்கள்” என்று எச்சரித்தார்.

பண்டித பந்தின் சேவையை ராஷ்டிரபதி பாராட்டினார். அவர் பார்லிமெண்ட் விவகாரங்களில், முதிர்ந்த அனுபவம் பெற்றிருந்ததாகவும் அவருடைய உதாரணம் எல்லோருக்கும் ஊக்கம் அளிப்பதாகவும் ராஷ்டிரபதி கூறினார். பண்டித பந்த் ஒரு சிறந்த நிர்வாகி என்றார். ராஜ்யங்களின் சிரமைப்புக்காக அவர் அரும்பாடு பட்டார் என்றும், அவர் சிறந்த அறிவாளி என்றும் ராஷ்டிரபதி கூறினார்.

குடியரசுத் தலைவரின் கடும் எச்சரிக்கை

*

'எந்நாளும் அந்நிய உணவு உதவியை நம்பியிருக்கும் பழக்கம் கூடாது'

"பொருளாதார நிர்வாகக் குறைபாட்டின் அறிகுறி அது"

புதுடில்லி, மார்ச், 8-உணவுத் தானியத்துக்காகப் பிறரையே நம்பியிருக்கும் பழக்கம், நாட்டின் பொருளாதாரத்தைச் சரிவர நிர்வகிக்காததன் அறிகுறியாகும் என்று ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் இன்று இங்குக் கூறினார்.

"அதையே பழக்கப்படுத்திக் கொண்டு விட்டால், தன்னிலையை இழந்தவர்களாகி விடுவீர்கள். பின்பு ஒவ்வொன்றுக்கும் காலம் பூராவும் ஏறக்குறைய அந்நிய உதவியை நம்பியிருக்க நேரிடும். இத்தகைய நிலைமையில் நாடு இருப்பது என்பது சந்தோஷமான விஷயமல்ல" என்று ராஷ்டிரபதி கூறினார்.

பார்லிமெண்டு கட்டிடத்துக்கு அருகில் காலம் சென்ற பண்டித கோவிந்த வல்லப பந்தின் சிலையைத் திறந்து வைத்து ராஷ்டிரபதி பேசினார்.

சமீபத்தில் சட்டசபைகளில் காணப்பட்ட குழப்பங்கள் குறித்து வருத்தம் தெரிவித்து விட்டு சட்ட சபைகளிலுள்ள நமது அங்கத்தினர்களின் இத்தகைய செயல்கள் நாட்டிலுள்ள இளைஞர்களுக்கு ஒருவிதமான அனாவசிய உற்சாகத்தை மூட்டுவதாகி விடுகிறது என்று கூறினார்.

"சட்டசபைகளில் அமர்ந்துள்ள முதியோர் இம்மாதிரி நடந்து கொள்ளுவதென்றால், ஏதோ கோளாறு நேர்ந்துள்ளதென்று தோன்றுகிறது. அவர்கள் தங்களை அறியாமலோ, உற்சாகத்திலோ, இம்மாதிரி நடந்து கொண்டாலும் அவர்களுடைய செயல்கள் இளைஞர்களிடையில் மறைமுகமாக உணர்ச்சியைத் தூண்டி விடுகிறது" என்று கூறினார்.

"இன்று ஒருவித பலாத்கார சூழ்நிலை பரவியிருப்பதைக் காண்கிறோம்" என்று கூறினார்.

'சட்ட சபைகளுக்கு அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்கும் போது அரசியல் கட்சிகள் அவர்களுடைய தகுதிகளை மட்டு

[41-ம் பக்கம் பார்க்க]

பரீட்சைகள் சீர்திருத்தம் பற்றி அரசு பரிசீலிக்கிறதாம்

ராஜ்ய சபையில் கல்வி அமைச்சர் தகவல்

பிரதி வருடமும் இலட்சக்கணக்கான மாணவர்கள் 'தவறு'வதன் விளைவு

மாணவர்கள் பல்வேறு கட்டங்களில் ஏராளமான எண்ணிக்கையில் பரீட்சைகளில் தேர்ச்சி பெறத் தவறுவதால் பரீட்சைகள் வீணாகி வருவதை நன்கு உணர்ந்து மிகவும் வருந்துவதாகவும் இந்த நிலை ஏற்படக் கூடாது என்றும், கல்வி மந்திரி திரு சாக்ளா இன்று ராஜ்ய சபையில் கூறினார்.

உயர்தர செகண்டரி பள்ளிப் பரீட்சைகளுக்குப் பிரதி வருடமும் ஆஜராகும் 14 லட்சம் மாணவர்களில் 7 லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் தேர்ச்சி பெறாமல் 'வீழ்த்தப்படுவதாக' ஒரு மெம்பர் கூறிய புகாருக்குத்தான் திரு. சாக்ளா மேற்கூறியவாறு பதில் கூறினார்.

திரு சாக்ளா மேலும் கூறினார் :- "இது ஒரு பெரிய சீர்திருத்த விஷயமாகும். இதற்காகச் சர்க்கார் தீவிர முயற்சி எடுத்து வருகிறது. இதைச் செய்வதற்குப் பெரும் பணஞ் செலவாகும். மேலும் கல்வி ராஜ்ய சர்க்கார்களின் பொறுப்பாகும். மத்ய சர்க்கார் ஆலோசனை தான் கூறலாம். திட்டத்தை அமல் நடத்த முடியாது.

3 வருடப் பட்டப் படிப்பு பல்வேறு சர்வகலாசாலைகளில் பல்வேறு விதமாக இருப்பதாகவும் இதனால் மாணவர்களுக்குப் பெருந் தொல்லைகள் ஏற்படுவதாகவும், திருமதி அம்மண்ண ராஜா புகார் கூறினார்.

3 வருடப் பட்டப் படிப்பை மேற் கொள்ளுமாறு சர்வகலா சாலைகளுக்குச் சர்க்கார் ஆலோசனை கூறியிருப்பதாகவும் பெரும்பாலான சர்வகலாசாலைகள் இந்த யோசனையை ஏற்றுக்கொண்டிருப்பதாகவும், ஆனால் சர்வகலா சாலைகளின் சுதந்திரத்தில் தலையிட முடியாதென்றும் திரு சாக்ளா பதில் கூறினார்.

பல்வேறு கல்வி ஸ்தாபனங்கள் நடத்தும் பரீட்சைகளின் தரம் ஒரே மாதிரியாக இருப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்று ஒரு மெம்பர் வலியுறுத்தினார்.

நாட்டில் சர்வகலாசாலைகளும் கல்வி ஸ்தாபனங்களும் நடத்தும் பல்வேறு பரீட்சைகளில் ஒரே மாதிரியான தரம் ஏற்படுத்துவதென்பது சர்க்காருக்கு சாத்தியமல்லவென்று திரு சாக்ளா பதில் கூறினார். கல்வித் துறையில் முன்னேற்றத்தைக் கருதி சர்வகலா சாலைகள் தமது இஷ்டம் போல பாடத் திட்டங்களைத் தீர்மானிக்கவும் மாணவர்களை மதிப்பீடு செய்யவும் சுதந்திரம் பெற்றிருக்க வேண்டும் என்று சாக்ளா கூறினார்.

செய்திச் சுருள்

அடுத்த 15 ஆண்டுகளில் படித்தவரிடை வேலையின்மை பெருகிவிடும்.

திட்டக் கமிஷன் மெம்பர் திரு. ராவ் கருத்து

லட்சுமணபுரி, பிப். 19—உத்யோகத்தை அதிக அளவுநோக்கமாகக் கொண்டுள்ளது நமது தற்போதைய கல்வி முறை இந்நோக்கதை மாற்றி கல்வி முறையை சீரமைக்காவிடில் அடுத்த 10 அல்லது 15 ஆண்டுகளில் படித்தவர்களிடையே வேலையின்மை சமாளிக்க முடியாத அளவுக்குப் பிரும்மாண்டமானதாகிவிடும் என்று திட்டக் கமிஷன் மெம்பர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் இன்று இங்கு கூறினார்.

அதிக அளவு உற்பத்தித்திறன் நோக்குள்ளதாக விளங்கும் ரீதியில் நமது கல்வி முறையை மாற்றியமைத்தாக வேண்டும் என்றார் லட்சுமணபுரி சர்வகலாசாலையில் "கல்வி ஒரு முதலீடு" என்பது பற்றிய கருத்தரங்கை திரு. ராவ் துவக்கி வைத்துப் பேசினார்.

உறபத்தித் திறன் நோக்கு என்றால் உத்யோகத்துக்கு வகை செய்வதோ அல்லது அதிக ஊதியம் பெற வகை செய்வதோ அல்ல; ஊதியத்துடன் கூடிய உத்யோகத்தை நாடுவது கல்வியுடன் இணைக்கப் பட்டிருக்கிறது. தானாக முயற்சி செய்து சம்பாதிக்கும் மனப்பான்மைக்கு இது முரணாக உள்ளது. இதனால் சுயமுயற்சியும், தன்னம்பிக்கையும் போதுமான அளவு இல்லாது போய்விடுகிறது. வருமானத்தை ஈட்டுவதற்கு உத்யோகம் பெறுவது ஒன்றே வழி என்ற எண்ணம் படிதத்வர்களிடையே நிலவுகிறது. இதற்கான காரணங்களை ஆராய்ந்தறிவதும், பரிகாரம் காண்பதும் நிபுணர்களின் கடமை.

கல்வியின் பொருளாதார அம்சம் சம்பந்தப்பட்டவரை, அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதார அமைப்பில் கல்விக்காக செலவிடுவது நியாயமானதே. இதனை முதலீட்டாக கருத வேண்டும்.

மனித வளத்தை அபிவிருத்தியடையச் செய்வது வளர்ந்து வரும் பொருளாதார அமைப்பில் கல்வியின்முக்கிய நோக்கமாகும்.

படித்தவர்களிடையே வேலையின்மை இல்லாதவரை முதலீட்டுக்குத் தக்க பிரதிபலன் நிச்சயம் உண்டு. ஆனால், தற்போது படித்தவரிடை வேலையின்மை நிலவுகிறது. எனவே முதலீட்டுக்குத் தக்க பலன் கிடைக்கவில்லை. கடந்த 15 ஆண்டுகளாக பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டும், படித்தவரிடை வேலையின்மை அதிகரித்து வருகிறது. ஆகவே வளர்ந்து வரும் பொருளாதார அமைப்பில் தேவைப் படும் திறமையாளர்களுக்கும், உயர்தர கல்விக்குமிடையே (முக்கியமாகப் பட்டப் படிப்புக்கு) நெருங்கிய சம்பந்தத்தை ஏற்படுத்துவது அவசியம் என்று

Association Publishing House

'ஆரம்பக் கல்வி நிலையம்'

94/95, New Street, Mannady, Madras-1.

(For High Schools and Higher Ele. Schools)

Phone: 24544 Post Box No. 1818

MATHEMATICS

ஆசிரியர்: பி. வீரராகவன்

சிறுவர் கணக்கு நூல்

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
இரண்டாம் வகுப்பு	0·62		
மூன்றும் வகுப்பு	0·87	37	18-5-'66

புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர்: பி. வி. நாகராஜன், பி.ஏ., எல்.டி.

ஆறும் வகுப்பு	1·50	50	18-5-'66

ஆசிரியர்: A. C. பாலசுந்தரம், பி.ஏ., எல்.டி.

ஏழாம் வகுப்பு	1·75	13	16-5-'62

SCIENCE

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர்: பி. வீரராகவன்

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
இரண்டாம் வகுப்பு	0·40		
மூன்றும் வகுப்பு	0·50		

ஆசிரியர்: M. விவேகாநந்தா பி.எஸ்சி., எல்.டி.,

நான்காம் வகுப்பு	0·75	6	18-5-'66

சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர்: கே. லக்ஷ்மிநாராயணசாமி, பி.ஏ.. எல்.டி.

ஐந்தாம் வகுப்பு	1·25	9	18-5-66

பொது விஞ்ஞானம்

ஆரும் வகுப்பு	1·25	25	18-5-'66

ஆசிரியர் : **பி. வி. நாகராஜன்,** பி.ஏ., எல்.டி.

ஒன்பதாம் வகுப்பு	1·75	33	18-5-66
பதினேராம் வகுப்பு	2·50	35	10-5-'61

HISTORY

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

சிறுவர் வரலாறு

மூன்ரும் வகுப்பு 0·50

ஆசிரியர் : **த. சே. உமாபதி,** எம்.ஏ., எல்.டி.

நான்காம் வகுப்பு

	புத்தகத்தின் விலை	செஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
சென்னை	0·87	11	18-5-66
செங்கற்பட்டு	0·87	12	18-5-66
வட ஆற்காடு	0 87	12	”
தென் ஆற்காடு	0·87	12	”
சேலம்	0·87	12	”
கோயமுத்தூர்	0·87	12	”
நீலகிரி	0·87	12	”
தஞ்சாவூர்	0·87	12	”
திருச்சி	0·87	12	”
மதுரை	0·87	12	”
இராமநாதபுரம்	0·87	12	”
திருநெல்வேலி	0·87	12	”
ஐந்தாம் வகுப்பு	1·00	42	”
ஆரும் வகுப்பு	1 00	54	”

SOCIAL STUDY

ஆசிரியர் : **த. சே. உமாபதி,** எம்.ஏ., எல்.டி.

ஏழாம் வகுப்பு	2·00	18	16-5-'62

GEOGRAPHY

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

மூன்ரும் வகுப்பு

சிறுவர் பூகோளம்

(சென்னை) 0·55

ஆசிரியர் : த. சே. உமாபதி, எம்.ஏ., எல்.டி.

நான்காம் வகுப்பு

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
சென்னை	0·62	46	18-5-66
செங்கற்பட்டு	0 62	19	,,
வட ஆர்க்காடு	0·62	18	18-5-66
தென் ஆர்க்காடு	0·62	18	,,
சேலம்	0·62	19	,,
கோயமுத்தூர்	0·62	19	,,
நீலகிரி	0·62	19	,,
ஐந்தாம் வகுப்பு	1·00	19	18-5-'66

TAMIL GRAMMER

இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனார்

ஆறும் வகுப்பு	0·75	4	16-5-'62
எட்டாம் வகுப்பு (III From)	0·75	4	10-5-'61

இலக்கணம் கட்டுரை மொழிப் பயிற்சி

புதிய பத்தாம் வகுப்பு	1·25	11	18-5-'60
புதிய பதினோராம் வகுப்பு	1·50	31	10-5'-61

ஐந்தாம் வகுப்பு

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
நீதிக் கதைகள்	0·50	17	18-5-60
அறிவுக் கதைகள்	0·50	15	18-5-60

TAMIL NON-DETAILED

ஆறும் வகுப்பு

அறிவுச் சுடர்	0·62	22	18-5'-66

பத்தாம் வகுப்பு

நாடும் மக்களும்	1·00	17	18-5-'60

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
தொண்டை நாட்டு மன்னர்	1·00	19	18-5-'60
பூம்புகார்	0·87	16	,,
திரு. வி. க.	0·87	32	13-5-'59

ENGLISH NON-DETAILED

Authar: Mrs. Lucy Arul Raj

VI STANDARD

Mother India Supplementary Reader

	0·50	49	18-5-66

III Form

VIII STANDARD

Mother India Supplementary Reader

	0·62	24	10-5-'61

கணிதம் கற்பிக்கும் முறை

ஆசிரியர் : லீலா பார்த்தசாரதி, பி.ஏ., எல்.டி.

	2·00	2	5-7-'61

சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர் : ஆர். சேஷாத்திரி, பி.ஏ.,பி.டி.

எட்டாம் வகுப்பு	1·00
பத்தாம் வகுப்பு	1·25
பதினோராம் வகுப்பு	1·50

உமாபதி உரை நூல்

மூன்றும் வகுப்பு	0·40
நான்காம் வகுப்பு	0·50
ஐந்தாம் வகுப்பு	0·60
ஆறும் வகுப்பு	1·00
ஏழாம் வகுப்பு	1·25

Association English Premier III Class 0·60

Association English guide IV Class 0·40 n.p.

புது முறை சங்க வாய்பாடு

100 பிரதிகள் 8·00

Edited Printed and Published by P. VEERARAGHAVAN.
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.